விவசாய மற்றும் பெருந் தோட்ட முகாமைத்துவ பீடத்திற்கு தகவல் தொழில் நுட்ப மற்றும் உயர் கணணி தொழில்பாட்டு பாடநெறிகளையும் மற்றும் கால் நடைகள் மீன்பிடி மற்றும் உணவூட்டல் பீடத்திற்கு தகவல் தொழில் நுட்ப பாட நெறியையும் வழங்குவதில் தகவல் தொலைத் தொடர்பு தொழில் நுட்ப நிலையம் தனது பணியை தொடர்கிறது. பல்வேறுபட்ட துறைகளால் நடத்தப்படுகின்ற புள்ளி விபரவியல் தொடர்பான பாடநெறிகளுக்கு விஷேடமாக செயல் முறை வகுப்புகளுக்கு தகவல் தொலைத் தொடர்பு தொழில் நுட்ப நிலையத்தினால் உதவியளிக்கப்பட்டு வருகின்றது. மேலும் தகவல் தொழில் நுட்பம் மற்றும் இலத்திரனியல் வர்த்தகமும் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமையும் ஆகிய இரண்டு பாடநெறிகளும் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படுகின்ற பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்களுக்கு நடாத்தப்பட்டு வருகிறது. வட-மேல் மாகாண மக்களின் நலன் கருதி இப்பொழுது நிலையம் பல்வேறு தகவல் தொழில் நுட்பம் தொடர்புடைய பாடநெறிகளை வழங்குவதன் மூலம் அதன் சேவைகளை விஸ்தரிக்கின்றது.

தகவல் தொலைத் தொடர்பு தொழில் நுட்ப நிலையமானது கிழமை நாட்களில் முற்பகல் 8.00 மணியிலிருந்து பிற்பகல் 8.00 மணி வரைக்கும் சனிக்கிழமை நாட்களில் முற்பகல் 8.00 மணியிலிருந்து பிற்பகல் 5.00 மணி வரைக்கும் திறக்கப்பட்டுள்ளது. பரீட்சைக் காலங்களில் திறக்கப்படும் காலப்பகுதியானது கிழமை நாட்களில் முற்பகல் 8.00 மணியிலிருந்து பிற்பகல் 10.00 மணிவரைக்கும் ஆகும்.

## 21.2 நடாத்தப்பட்ட பயிற்சி மற்றும் விளிப்புணர்வு நிகழ்ச்சிகள்

- கணணி வன்பொருள் இணைப்பு என்ற தலைப்பில் ஒரு நாள் பயிற்சி பட்டறை தகவல் தொழில் நுட்ப டிப்ளோமா பாடநெறி மற்றும் கணணி செயல்பாடுகள் மற்றும் திறன்களில் சான்றிதழ் பாடநெறி ஆகியவற்றை பின்பற்றும் மாணவர்களுக்கு நடத்திவைக்கப்பட்டது - மார்ச் 2014
- கணணி செயல்பாடுகள் மற்றும் திறன்களில் சான்றிதழ் பாடநெறியில் ஐந்தாவது உள்ளெடுக்கும் படிமுறை பூர்த்தியாக்கப்பட்டது.
  - மே 2014
- தகவல் தொழில் நுட்பத்தில் டிப்ளோமா மூன்றாம் உள்ளெடுக்கும் படி முறைகள் பூர்த்தி செய்யப்பட்டது – டிசம்பர் 2014
- இலத்திரனியலில் கற்கும் முறையில் அறிமுகம் என்ற தலைப்பில் மூன்று பயிற்சி பட்டறைகள் யூ டி ஜீ மற்றும் இருபத்தோராம் நூற்றாண்டிற்கான உயர் கல்வி ஆகிய கருத்திட்டங்களின் கீழ் மாணவர்கள், பணிக்குழுவினர் மற்றும் தொழில் நுட்ப பணிக்குழுவினருக்கு பூர்த்தியாக்கப்பட்டது
- கற்கும் முகாமைத்துவ முறை அபிவிருத்தி என்ற தலைப்பில் இரண்டு பயிற்சி பட்டறைகள் கல்விசார் பணிக்குழுவினருக்கு யூ டி ஜீ மற்றும் இருபத்தோராம் நூற்றாண்டிற்கான உயர் கல்வி ஆகிய கருத்திட்டங்களின் கீழ் பூர்த்தியாக்கப்பட்டது
- கணணி செயல்பாடுகள் மற்றும் திறன்களில் சான்றிதழ் பாடநெறியில் ஆறாவது உள்ளெடுக்கும் படிமுறை பூர்த்தியாக்கப்பட்டது
  - ஒக்டோபர் 2014

- தகவல் தொழில் நுட்பத்தில் டிப்ளோமா நான்காம் உள்ளெடுக்கும் படி முறை ஆரம்பிக்கப்பட்டது – நவம்பர் 2014
- விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் கால்நடை, மீன்பிடி மற்றும் உணவூட்டல் ஆகிய இரு பீடங்களின் பட்டதாரிகளுக்கான புதிய தகவல் தொலைத் தொடர்பு தொழில் நுட்ப பாடத்திட்டம் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது
- இருபத்தோராம் நூற்றாண்டிற்கான உயர் கல்வி கருத்திட்டத்தின் கீழ் பணிக்குழு மாணவர் மற்றும் தொழில் தருநர்கள் ஆகியோருக்கு ஒரு பகுப்பாய்வுத் தேவை பாடநெறி மதிப்பீடு ஆகியவற்றில் பயிற்சிப் பட்டறை நடாத்தி வைக்கப்பட்டது
- பணிக்குழு அபிவிருத்தி நிலையத்தின் கூட்டு முயற்சியுடன் பல்கலைக்கழக கணணி தொழிற்பாட்டு உதவியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு இயங்கு தளம் மற்றும் தரவுத்தள முகாமைத்துவ முறைமைகள் ஆகிய தலைப்புகளில் இரண்டு பயிற்சிப் பட்டறைகள் நடாத்தி வைக்கப்பட்டது
- கடற்படை மாலுமிகள் மற்றும் இலங்கை கடலாண்மைக் கல்லூரி ஆகியவற்றில் உள்ள தகவல் தொழில் நுட்ப பயிற்சியாளர்களுக்கு தகவல் தொலைத் தொடர்பு தொழில் நுட்பத்தில் பயிற்சி பட்டறை ஒன்று செப்டம்பர் 2014இல் நடாத்தி வைக்கப்பட்டது
- குருநாகலை மாவட்டத்தின் தொழில் பயிற்சி நிலையத்தின் தொழில் பயிற்சியாளர்களுக்கு தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் வலையமைப்பு பயிற்சி பட்டறை ஒன்று டிசம்பர் 2014 இல் நடாத்தி வைக்கப்பட்டது

### 21.3 ஆராய்ச்சி நடவடிக்கைகள்

இரண்டு வெளியீடுகள்

(1)வீரசிங்க, கே எஸ் ரிச்சட் எல் ஹார்கெஸ் மற்றும் அன்டி டி போர்க்கின்ஸ். 2014. கற்பித்தல் தொழில்கூட சாதனங்களுக்கான ஓர் ஊடாடும் ஒன்லைன் தரவுத்தளத்தின் மேம்பாடு. வயம்ப சர்வதேச மகாநாடு (வின்சி), 2014 ஆகஸ்ட் 29 இலிருந்து 30 வரைக்கும் குளியாப்பிட்டிய வடமேல் மாகாணம் இலங்கை

(11) கஜநாயக்க, பீ காஞ்சனா எஸ் வீரசிங்க மற்றும் கே ஆர் ரெட்டி 2014 திரையிடப்படுகின்ற தோட்டத்து ரோஜாப்பூக்களுக்கான கலைநய பண்பும் மற்றும் உயிரற்ற மனஅழுத்த பொறுமை. வயம்ப சர்வதேச மகாநாடு (வின்சி), 2014 ஆகஸ்ட் 29 இலிருந்து 30 வரைக்கும் குளியாப்பிட்டிய வடமேல் மாகாணம் இலங்கை

### 21.4 பணிக்குழு

| | |
|---|---|
| தொகுதி பொறியியலாளர் | -01 |
| போதனாசிரியர்- கணணி தொழில் நுட்பம் | -01 |
| விரிவுரையாளர் (தகுதிகாண் நிலை) கணணித் தொழில் நுட்பம் | -02 |
| கணிணி செயற்ப்பாட்டு உதவியாளர் | -01 |
| ஆய்வு கூட உதவியாளர்கள் | -01 |
| தொழிலாளி | -01 |

- ➢ கலாநிதி டபிளியூ ஜே ஜி கே எஸ் வீரசிங்க மே 2014 இல் அவருடைய கலாநிதி பட்டத்தை முடித்த பின்னர் மீண்டும் பணிக்கு திரும்பினார்

- திரு.எச்.டப்ளியூ.எச் பிரேமச்சந்ரவுடைய கணணி போதனாசிரியராக ஒப்பந்த அடிப்படையில் 2014 மே 12ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் ஒரு வருட காலத்திற்கு சேவைக்கு உள் வாங்கப்பட்டார்
- திரு.எஸ் பீ எம் சி பி ஹேரத் உடைய சேவை கணணி போதனாசிரியராக தற்காலிக அடிப்படையில் 2014 டிசம்பர் 2ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் ஒரு வருட காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது
- திரு எச் ஏ சி கே ஜெயதிலக அவருடைய கலாநிதி பட்டப்படிப்புக்காக 2014 பெப்ரவரியில் இருந்து கல்வி விடுமுறையில் உள்ளார்

### 21.5 பாதீடு

தகவல் தொலைத்தொடர்பு தொழில் நுட்ப நிலையத்திற்கு 2.0 மில்லியன் ஒதுக்கப்பட்டு அது கணணித்தர நிலை உயர்த்துவதற்கு பயன் படுத்தப்பட்டது.

தகவல் தொழில் நுட்ப நிலையத்திற்காக 11.5 மில்லியன் பெற்றுக் கொள்ளப்பட்டு அது விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடம் மற்றும் கால்நடை, மீன்பிடி மற்றும் உணவூட்டல் பீடம் ஆகியவற்றின் பீட வலையமைப்புகளின் கணணி விஞ்ஞானகூடம் நிறுவுவதற்காக பயன்படுத்தப்பட்டது.

### 21.6 இவ்வருட காலத்திற்குள்ளான செயற்பாடு

- இருபத்தோராம் நூற்றாண்டுக்கான உயர் கல்வி நிதியிலிருந்து பல்கலைக்கழக வை பை வலயமைப்பு ஸ்தாபிக்கப்பட்டது
- பல்கலைக்கழக வலையமைப்பு புதிய மாணவர் விடுதிக்கு விரிவு படுத்தப்பட்டது
- இருபத்தோராம் நூற்றாண்டுக்கான உயர் கல்விகருத்திட்ட நிதியை பயன் படுத்தி புதிய மாணவர் விடுதிகளில் ஒரு சிறிய கணணி விஞ்ஞான கூடம் அமுல் படுத்தப்பட்டது
- இருபத்தோராம் நூற்றாண்டுக்கான உயர் கல்வி நிதியிலிருந்து மாணவர் விடுதிகளில் இரண்டு சிறிய கணணி விஞ்ஞான கூடங்கள் மேம் படுத்தப்பட்டன
- 2014 ஏப்ரலில் மஹாகந்துர வளாகத்தில் களை கட்டு நிரல் பாதுகாப்பு உள்ளீடு செய்யப்பட்டது
- இணையத்தள அலைவரிசை 40 நொடிகளில் இருந்து 10 நொடிகளாக அதிகரிக்கப்பட்டும் மற்றும் இணைப்பு வேகம் 100 நொடிகளில் இருந்து 50 நொடிகளாகவும் அதிகரிக்கப்பட்டும் காணப்பட்டன

## 21.7 குறைபாடுகள் ஏதாவது இருப்பின்

- கணணி விஞ்ஞான கூடத்திற்கு பௌதீக ரீதியான இடப்பரப்பு குறைபாடு
- வேண்டப்படுகின்ற அளவுக்கு ஏற்ப விரிவுரை மண்டபங்களும் பணிக்குழுவிற்கான அறைகளும் கிடைக்கப் பெறாமை

## 21.8 அபிப்பிராயங்களும் எதிர்கால அபிவிருத்திகளும்

தகவல் தொலைத் தொடர்பு தொழில் நுட்ப நிலையத்துக்கான 2000 வர்க்க மீற்றருடன் தனியான ஒரு கட்டிடம்

### 21.9 வேறு தொடர்புடைய தகவல்கள்

- திரு.டப்ளியூ.டி.சமன்விக்ரம என் ஓ சி லேன் ஆல் ஒழுங்கு செய்யப்பட்ட வருடாந்த என் ஓ சி கூட்டத்திற்கும் மற்றும் வளாக வடிவமைப்பு முறை பயிற்சிப் பட்டறையிலும் பங்குபற்றினார் (ஜனவரி 2014)

# 22. ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவு- குளியாப்பிட்டிய வளாகம்

## 22.1 தொலை நோக்கு

ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவின் தொலைநோக்கானது இலங்கையின் உயர் கல்வித் துறையில் முதல்தர ஆங்கில மொழி கற்பித்தல் நிலையமாக விளங்குவதாகும்.

## 22.2 பணித்திட்டம்

பட்டதாரி மாணவர்களின் ஆங்கில மொழி வளத்திற மேம்படுத்துவதற்கு அவர்களுக்கு விஸ்தரித்த வகைப்படுத்தலுடன் கற்பித்தல் மற்றும் கற்றல் சந்தர்பங்களை ஆங்கில மொழி கற்ப்பித்தல் பிரிவு தனது பணித்திட்டத்தில் பின்வருவனவற்றை உள்ளடக்கி கொள்கிறது

- கற்றல்,உரையாடல், வாசித்தல்,எழுதுதல் மற்றும் சமூகத்தில் பழகும் ஆற்றல் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு பாரிய அருந்திறனுடன் பயனுறுதியுள்ள செயல்வகை ஊடாக பணியாற்றல்
- கல்வி, சமூக மற்றும் தொழில் ரீதியாக கூடிப்பேச மாணவர்களுக்கு அகத்தூண்டுதல் அளித்து இயக்கத்தன்மை உள்ளவர்களாக மாற்றுதல்
- மனித வளங்களை பயனுறுதி உள்ள தொடர்பாடல் திறன்களுடன் தேசிய அபிவிருத்தி தேவைகளுக்கு முகம் கொடுக்க செய்வதனை விருத்தி செய்ய வசதி அளிப்பது

குளியாப்பிட்டிய வளாகத்தின் ஆங்கில மொழிகள் கற்கைகள் பிரிவானது தேவைப்படுகின்ற உயர் திறனுள்ள கல்வி ஆங்கில மொழித் திறன்களுக்கு மாணவர்கள் முகங் கொடுக்கும் வகையிலும் நேர்மையான முறையில் எதிர் காலத்தில் அவர்களது தொழிலை விருத்தி செய்வதற்கும் மாற்றியமைத்துக் கொள்ளத்தக்க நிலமைக்கு தக்கபடி தன்னை வேறுபடுத்தி கொள்ள கூடிய வகையிலும் பயனள்ள பிரஜைகளை நாட்டிற்க்கு உருவாக்கி கொடுக்கும் விதத்திலும் தனது சேவையை வழங்குகிறது. அது தனது முக்கியமான பாட நெறிகளை அடையாளப்படுத்திக் கொள்வதன் ஊடாக,பங்காளர்கள் மற்றும் நடவடிக்கைகள் ஊடாக தெளிவாக பேசும் ஆற்றலை இடைவினை ஊடாக ஊக்குவித்து மிகப் பாரிய சமூக சிந்தனை நோக்கத்திற்கு பங்களிப்பு செய்து தேசிய அபிவிருத்திக்கு உதவுகின்றது. பல்கலைக்கழக ஆங்கில மொழி பரீட்ச்சிக்கும் முறை (யூடெல்) ஆனது நியமத்தினையும் மற்றும் மாணவனையும் மையமாக கொண்டு கற்பித்தல் முறை அறிமுகப்படுத்தபட்டதுடன் மேலும் ஆங்கில மொழித் தேர்ச்சியை விருத்தி செய்து கொள்ளும் செயற்பாடுகளில் பங்கெடுத்துக்கொள்ள அதிக சந்தர்ப்பங்கள் மாணவர்களுக்கு வழங்கி உட்சபட்ச நம்பிக்கையை 2014ஆம் ஆண்டில் ஏற்படுத்தியது.

## 22.3 இப்பிரிவின் பணிக்குழு

**இப்பிரிவின் கல்விசார் பணிக் குழு**

திரு ஈ. எம். எச். ஜே. எதிரிசிங்க – (இணைப்பாளர்)

திரு எம். கே. எஸ். எம். சமரநாயக்க – விரிவுரையாளர்

செல்வி டப்ளியூ. எஸ். ஏ. பெர்னாந்து - விரிவுரையாளர்

திரு கே. எம் திசாநாயக்க – விரிவுரையாளர் (கல்வி விடுமுறை)

**தற்காலிக போதனாசிரியர்**

செல்வி என்.பி.சி.ஜே.விஜயவர்த்தன

செல்வி ஏ. பிரியதர்சினி
செல்வி எல். ஜெயவிக்ரம
திரு எல். பண்டாரநாயக்க

**கல்விசாரா அணியினர்**

செல்வி டி. ஜி. ஆர். எம் விஜயசிங்க (கணணி தொழிற்பாட்டு உதவியாளர்)

திரு டப்ளியூ. பி. டீ. சிறிவர்த்தன (அலுவலக உதவியாளர்)

## 22.4 2014 காலப்பகுதியில் வழங்கப்பட்ட கல்வி நிகழ்ச்சிகள்

**1) பிரயோக விஞ்ஞானங்கள் பீடத்திற்கு உரியது**

- ஆழ்ந்த செறிவை உண்டுபண்ணுகின்ற புதிய மாணவர்களுக்கான ஆங்கில பாட நெறி
- செயல் திறன் மிக்க ஆங்கில மொழி பாட நெறி 1ஆம் மட்ட மாணவர்களுக்கானது
- செயல் திறன் மிக்க ஆங்கில மொழி பாட நெறி 2ஆம் மட்ட மாணவர்களுக்கானது
- வியாபார ஆங்கிலத்தில் சான்றிதழ் பாட நெறி 3ஆம் மட்ட மாணவர்களுக்கானது
- உயர் செயல் திறன் மிக்க ஆங்கிலபாட நெறி 3ஆம் மட்ட மாணவர்களுக்கானது

**2) வியாபார கற்கைகள் மற்றும் நிதிப் பீடத்திற்கு உரியது**

- ஆழ்ந்த செறிவை உண்டுபண்ணுகின்ற புதிய மாணவர்களுக்கான ஆங்கில பாட நெறி

- ஆங்கிலம் 01 ஆரம்ப இலக்கண நிலை (ஈஎல்ரீயூ1110)-ஆண்டு 01
- ஆங்கிலம் 02 கட்டுரை (ஈ எல் ரீ யூ 1210) – ஆண்டு 01
- வியாபார தொடர்பாடல் 1(பீ எஸ் எப் 2131) - ஆண்டு 02
- வியாபார தொடர்பாடல் 02(பீ எஸ் எப் 2251) - ஆண்டு 02

பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் செயல் திறன் மிக்க பாட நெறிகளுக்கு அப்பால்பட்ட வயம்ப பல்கலைக்கழகமானது அதன் சேவையை பரந்து பட்டரீதியில் விஸ்தரித்து வெளிச் சமூதாயத்தினருக்கு பல்வேறு வெளிவாரி பாட நெறிகளையும் பயிற்சி பட்டறைகளையும் 2014 காலப்பகுதியில் நடாத்தி முடித்துள்ளது. கல்வி பொதுத் தராதர சாதாரண தர பாடசாலை பிள்ளைகளுக்கு ஆங்கில மொழி செயல் திறன் பயிற்சி பட்டறைகள் அவற்றுள் சிலவாகும். வெளிச் சமூகத்திற்கான ஒரு வருட ஆங்கில பாடநெறி டிப்ளோமாவுக்கு உள்ளெடுக்கும் 8ஆவது படி முறை முடிக்கப்பட்டு 300 மாணவர்கள் பாட நெறியை பின்பற்றுவதற்கு பதியப்பட்டுள்ளனர்

மூன்றாம் வருட பட்டபடிப்பு மாணவர்கள் பின்பற்றும் வியாபார ஆங்கில சான்றிதழ் பாடநெறிக்கான நேர்முக பரீட்சை பயிற்சிகள் இந்த துறையில் உள்ள வெளி நிபுணர்களின் உதவியுடன் நடத்தப்பட்டு மேலும் அது மாணவர்களுக்கு மிகவும் பயனுடையதாக இருந்தது.

### 22.5 திட்டமிட்டு நடாத்தப்பட்ட மேலதிக செயற்பாடுகள்

***யூடிஜி கருத்திட்டத்தின் கீழ் திட்டமிட்டு நடாத்தப்பட்ட மேலதிக செயற்பாடுகள்***

பட்டப்படிப்பு மாணவர்களிளுடைய மொழி செயல் திறன் மிக்க அறிவை விருத்தி செய்து கொள்ளும் பொருட்டு பின்வரும் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டன.

1) ஆங்கில மொழி பாட விதானம் மீளமைத்தல்.
2) ஆங்கில மொழி கற்கை பிரிவின் மொழி நிலையத்தில் வசதிகள் தரநிலை உயர்த்தப்படல்.
3) இலத்திரனியல் கற்றல் பாட விதானம் கற்புறுத்தல்(ஒரு வியாபார ஆங்கில சான்றிதழ் பாடநெறி முடிக்கப்பட்டது )
4) ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சிகள் ஒழுங்குபாடு செய்தல்
5) மொழி முகாம்கள் ஒழுங்குபாடு செய்தல்
6) ஆங்கில தின போட்டிகள் ஒழுங்கு பாடு செய்தல் - 2014.
7) மாணவர்களால் நடாத்தப்படும் சஞ்சிகை செய்தி மடல் மற்றும் மேசைபின்னி ஆகியன தொடக்கி வைத்தல்

### 22.6 குறைபாடுகள்

ஓவ்வொரு வருடங்களும் இரு பீடங்களும் அவர்களுடைய வருடாந்த உள்ளெடுக்கும் மாணவர் தொகை அதிகரித்து வந்த போதிலும் புதிதாக எந்தவொரு பதவி நிலைகளுளோ அல்லது புதிய விரிவுரையாளர்களோ 2005ஆம் ஆண்டில் இருந்து ஆங்கில மொழி கற்பிக்கும் பிரிவிற்கு பதவிக்கு அமர்த்திக் கொள்ளப்படவில்லை. இரு பீடங்களுக்கும் இருப்பது மூன்றே மூன்று தகுதிகாண் விரிவுரையாளர்களாக இருக்கின்ற அதே வேளை பீடங்களை திருப்தி படுத்தும் முகமாக தங்கு தடையின்றிய எமது சேவை கடமைப் பற்று உணர்ச்சியுடனும் அர்ப்பணிப்புடனும் ஆங்கில மொழித் திறன்களை பட்டதாரி மாணவர்களுக்கு ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவு செய்து வந்து கொண்டு இருக்கின்றமையை இங்கு குறிப்பிடுவது மிகவும் சாலச்சிறந்தது. விரிவுரையாளர்களின் அதிக தேவைப்பாடுகள் உச்சபட்சமாக உணரப்பட்டுக் கொண்டிருப்பதோடு புதிதாக பதவிக்கு அமர்த்தப்படக்கூடிய சூழலும் காணப்படுகின்ற அதே வேளை எம்மால் நல்லதோர் சேவையை வழங்கவும் பீடங்களில் ஏற்ப்படும் நிலை குலைவை தவிர்க்கவும் போதியளவு நிரந்தர கல்விசார் பணிக்குழுவினரின் குறைபாடும் இதனால் நீக்கப்படும்.

அத்துடன் மொழி ஆய்வு கூடத்திற்கு மிக அவசரமாக தேவைப்படும் தொழில் நுட்ப அதிகாரியொருவரின் தேவை மிக விரைவாக கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுவது இன்றியமையாத தேவையாக அமைவதோடு ஏனெனில் தொழில் நுட்ப அதிகாரியின் குறைபாடானது மொழி நிலையத்தின் அன்றாட செயற்பாடுகளில் மிகவும் பாதகமான விளைவை ஏற்படுத்துவதாக அமைகின்றது.

# 23. ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவு- மஹாகந்துர வளாகம்

## 23.1 அறிமுகம்

ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவானது (ஆ.மொ.க.பி.) மஹாகந்துரையில் அமைந்துள்ள இரண்டு பீடங்களிளுடைய 1ஆம் 2ஆம் மற்றும் 3ஆம் வருட மாணவர்களுக்கு ஆங்கில பாட நெறிகளை நடாத்தியது. ஆரம்ப நிலை ஆங்கிலம் என்ற பாட நெறியை விவசாய மற்றும் பெருந் தோட்ட முகாமைத்துவ பீடத்தில் முதலாம் வருட மாணவர்களுக்கும் மற்றும் விஞ்ஞானத்திற்கான ஆங்கிலம் என்ற பாட நெறியை கால்நடைகள் மீன்பிடி மற்றும் உணவூட்டல் பீடம் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கும் நடாத்து வித்தது. விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்தவ பீட இரண்டாம் வருட மாணவர்களுக்கு அறிவு செறிந்த எழுத்தாற்றலும் மற்றும் கால் நடை மீன்பிடி மற்றும் உணவூட்டல் பீடத்தின் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு அறிவு செறிந்த ஆங்கில பாடநெறி கற்பிக்கப்பட்டு வந்தது வியாபார ஆங்கில சான்றிதழ் பாடநெறி விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீட இரண்டாம் மூன்றாம் பருவ நிலை மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டது. ஆழ்ந்த செறிவினை உண்டு பண்ணும் ஆங்கில பாடநெறி பல்கலைக்கழககங்களுக்கு புதிதாக வந்தவர்களுக்கு 2014 பெப்ரவரியிலிருந்து ஏப்ரல் வரை மஹாகந்துர வளாகத்தில் வெற்றிகரமாக நடாத்தி முடிக்கப்பட்டது.

## 23.2 நடாத்தப்பட்ட பயிற்சிகளும் விளிப்புணர்வு நிகழ்ச்சிகளும்

ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவானது ஜுன் 2014க்கான வொய்ஸ் இற் அவுட் மஹாகந்துர வளாகத்தில் நடத்தியது. இது மஹாகந்துர ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவின் பணிக்குழுவினரால் நடத்துவிக்கப்பட்டது. இந்த ஒரு நாள் நிகழ்ச்சியில் கால்நடை மீன்பிடி மற்றும் உணவூட்டல் பீடத்தைச் சேர்ந்த 50 மாணவர்கள் கலந்து கொண்டனர். பல்கலைக்கழக ஆங்கில மொழிப் பரீட்சித்தல் இருபத்தோராம் நூற்றாண்டுக்கான கருத்திட்டத்தினால் நிதியளிக்கப்பட்டு அது 2014இல் நடாத்தி வைக்கப்பட்டது. எழுத்துப் பரீட்சையும் ஒன்லைன் பரீட்சையும் ஜுலையில் நடத்தப்பட்டு மேலும் பேச்சுப் பரீட்சை நவம்பரில் நடத்தப்பட்டது. மஹாகந்துர ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவு மற்ற பல்கலைக்கழகங்களில் இருந்து வருகை தந்த பரீட்சகர்களுக்கு வசதியளித்தது. சகல மஹாகந்துர வளாகத்தின் பணிக்குழு உறுப்பினர்களும் இருபத்தோராம் நூற்றாண்டின் உயர் கல்வியால் ஒழுங்கு செய்யப்பட்ட பாட விதான மீளமைப்பு பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டனர். பாட விதானமும் மற்றும் படிப்பித்தல் உபகரணமும் பல்கலைக்கழக ஆங்கில மொழி பரீட்சித்தல் (யூ ரி ஈ எல்) நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டது. மஹாகந்துர வளாகத்தின் இரு பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள் ஆங்கில தினப் போட்டிகளில் கலந்து கொண்டனர். ஆங்கில பாட நெறியை ஊக்குவித்து கற்பிப்பதற்கு பணிக்கு உள்வாங்கப்பட்ட போதனாசிரியர்கள் ஆங்கில மொழி கற்பித்தலில் உள்ள பல முறைமைகளில் இணைப்பாளரினால் பயிற்றுவிக்கப்பட்டு சிறந்த கற்பித்தல் முறைகளைப் பற்றிய பல கலந்துரையாடல்கள் நடாத்தி வைக்கப்பட்டன. ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவு பணிக்குழு உறுப்பினர்களின் அறிவுகளையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்வதற்கு வழமையான கூட்டங்களை நடத்தியது. இலத்திரனியல் கற்பித்தலில் நான்காம் படி நிலையூடான ஆங்கில பாடநெறி சான்றிதழுக்கு 15 பங்கு பற்றுனர்களை உள்வாங்கி ஒக்டோபரில் ஆரம்பிக்கப்பட்டது.

### 23.3 பணிக்குழு நிலை

ஆங்கில மொழி கற்கைகள் பிரிவானது ஒரு நிரந்தர ஆங்கில போதனாசிரியரையும் தற்காலிக அடிப்படையில் சேவைக்கு அமர்த்தியுள்ள நான்கு போதனாசிரியர்களையும் கொண்டுள்ளது. மேலும் இந்தப் பிரிவு ஒரு வருகை தரு ஆங்கில போதனாசிரியரின் சேவையையும் பெறுகின்றது. அதனை விட மேலதிகமாக கணணி செயற்பாட்டு உதவியாளரையும் ஒரு தொழிலாளியையும் மஹாகந்துரவில் உள்ள ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவு கொண்டுள்ளது. முதன் முறையாக கணணி தொழிற் பாட்டு உதவியாளர் மற்றும் தொழிலாளி ஆகியோருக்கு கடமைப் பட்டியல்கள் தயார் படுத்தப்பட்டது இது பதிவாளர் அலுவலகத்தின் அறிவுறுத்தல்களுக்கமைய செய்யப்பட்டது.

### 23.4 இவ்வாண்டுக்குள் நடந்த செயற்பாடுகள்

பீட மட்டத்திலான ஆங்கில தினப் போட்டிகள் நடாத்தப்பட்டு மற்றும் பல்கலைக்கழக மட்டத்திலான போட்டிகளில் பங்குபற்றுவதற்கு மாணவர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். பல்கலைக்கழக மட்டத்திலான போட்டிகள் மே மாதத்தில் நடத்தப்பட்டது. பல்கலைக்கழக ஆங்கில மொழி பரீட்சை சான்றிதழ் வழங்கும் வைபோகம் கலதாரி ஹோட்டலில் ஜுன் மாதத்தில் நடத்தி வைக்கப்பட்டது. சகல ஆங்கில நிகழ்ச்சிகளும் வெற்றிகரமாக நடாத்தி வைக்கப்பட்டது. வெளிவாரி பரீட்சாத்திகளுக்கான இலத்திரனியல் கற்றல் ஊடான 3ஆம் படிநிலைக்கான ஆங்கில சான்றிதழ் பாட நெறியானது மஹாகந்துர வளாகத்தில் நடாத்தப்பட்டது. வியாபார ஆங்கில சான்றிதழ் பாடநெறி விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீட உள்வாரி மாணவர்களுக்கு இனாமாக கற்பிக்கப்பட்டது. இந்தப் பாடநெறிக்கு ஈர்க்கப்பட்டிருந்த மாணவர்கள் இதில் கலந்து கொண்டு குறித்த பரீட்சையிலும் சித்தி எய்தினர்.

ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவின் பிரதான நுழை வாயில் இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் பேராசிரியர் எஸ் ஜே பீ ஏ ஜெயசேகர அவர்களால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. அதே நாள் அன்று, இலத்திரனியல் கற்றல் ஊடான ஆங்கில சான்றிதழ் பாட நெறியில் பங்கு பற்றுநர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. இணைப்பாளர் பயிற்சி நிகழ்ச்சிகளிலும் மற்றும் விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடத்தின் பாடத்திட்ட மறுசீரமைப்பு கூட்டங்களிலும் கலந்து கொண்டார். ஒரு புதிய ஆங்கில பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டு மற்றும் அது அதனது சொந்த பாடத்திட்ட மீளமைப்புகளுடன் பீடத்தினால் அனுமதி அளிக்கப்பட்டது.

### 23.5 குறைபாடுகள் ஏதாவது இருப்பின்

மிகப் பாரியதோர் குறைபாடாக ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவில் படிப்பித்தலுக்கு நிரந்தர பணிக் குழுவில் தட்டுப்பாடு நிலவுவதாகும்.

### 23.6 அபிப்பிராயங்கள்

மஹாகந்துர ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவில் வகுப்புகள் நடத்துவதற்கு பணிக்குழுவினரை நிரந்தர அடிப்படையில் பதவியில் அமர்த்துவதற்கு அபிப்பிராயம் வழங்குகின்றது. ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவில் உள்ள போதனாசிரியர்களுக்கு இலத்திரனியல் கற்றல் நிகழ்ச்சிகளில் தொழில் நுட்ப செயற்பாடுகளில் பயிற்சி தேவைப்படுகிறது.

# 24 . வைத்திய நிலையம்

இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தில் இரண்டு இயங்கும் வைத்திய நிலையங்கள் இருந்தன. இந்த இரு வைத்திய நிலையங்களும் குளியாப்பிட்டிய வளாகத்திலும் மஹாகந்துர வளாகத்திலும் தனது முக்கிய பாத்திரமான வயம்ப பல்கலைக்கழகத்தில் ஆரோக்கியத்தை ஊக்குவித்தலை 2013ல் செய்தது போலவே 2014 இலும் தனது பணியை செய்தது.

குளியாப்பிட்டிய வளாகத்தின் பணிக்குழு 2013ஆம் ஆண்டினைப் போலவே ஒரு தாதி, ஒரு பொது சுகாதார பரீட்சகர், ஒரு மருந்தீட்டாளர், ஒரு சுருக்கெழுத்தாளர், ஒரு சேவகர் மற்றும் ஒரு தொழிலாளி ஆகியோரை உள்ளடக்கியது மஹாகந்துர வளாகத்தில் உள்ள வைத்திய நிலையம் சுருக்கெழுத்தாளரை தவிர அதே பணிக்குழுவினரை கொண்டுள்ளது.

புதிதாக நியமனம் பெற்ற பணிக்குழு உறுப்பினர்கள் மற்றும் சேவை நீடிப்பு பெறும் பணிக்குழு உறுப்பினர் ஆகியோருக்கு வைத்திய அதிகாரியினால் வைத்திய பரிசோதனை செய்யப்பட்டது.

சிறு நோய்களுக்கு உட்பட்ட மாணவர்களும் பணிக்குழுவினரும் பல்கலைக்கழக வைத்திய நிலையத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டு விஷேட வைத்திய தேவைப்பாடுகள் உள்ளவர்கள் குளியாப்பிட்டிய ஆதார வைத்திய சாலைக்கு பரிந்துரைக்கப்பட்டு அனுப்பப்பட்டனர்.

2014ஆம் ஆண்டில் பலதரப்பட்ட சுகாதார ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

1. பெண்கள் ஆரோக்கிய சிகிச்சை மற்றும் மக்களிடையே பரவாத நோய்கள் பற்றிய நிகழ்ச்சி
2. அநாதைகளாக சுற்றித்திரியும் ஞமலிகளை மலடாக்கல்
3. நுளம்புகள் கட்டுப்படுத்தும் நிகழ்ச்சி
4.

பொதுவாக 2014ம் ஆண்டு காலப்பகுதியில் வைத்திய பணிக்குழுவானது குளியாப்பிட்டிய மற்றும் மஹாகந்துர ஆகிய இரு வளாகங்களையும் உள்ளிட்ட முழு மொத்த பல்கலைக்கழக சமூகத்திற்கும் ஒரே குடையின் கீழ் நின்று உதவக் கூடியதாக இருந்தது குறிப்பிடப்பட்டது.

## 25. மீண்டெழும் செலவின விபரங்கள்

| விடயங்கள் | 2013 ரூபாய்களில் | 2014 ரூபாய்களில் |
|---|---|---|
| அ.தனினபர் ஊதியம் | 386,682,763 | 467,368,504 |
| ஆ. பயணம் | 1,762,597 | 3,691,942 |
| இ. வழங்கள் | 30,631,815 | 35,804,775 |
| ஈ. பராமரிப்பு | 9,551,845 | 15,219,804 |
| உ. ஒப்பந்த சேவைகள் | 114,608,404 | 120.510,792 |
| வேறு | 17,779.217 | 28,229,796 |
| **மொத்தம்** | **561,016,641** | **670,825,613** |

## 26.மூலதன செலவு விபரம்

| விடயங்கள் | 2013 ரூபாய்களில் | 2014 ரூபாய்களில் |
|---|---|---|
| அ. பெற்ற தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 53,389,781 | 123,843,857 |
| ஆ. பெற்ற யந்திர உபகரணங்கள் | - | - |
| இ. பெற்றுக் கொண்ட கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் | - | - |
| ஈ.பெற்ற நிலபுலன்கள் | 4,013,750 | 7,000,000 |
| உ.வேறு (நூல்கள் மற்றும் வேறு பொருட்கள்) | 9,668,442 | 7,365,575 |
| **மொத்தம்** | **67,071,973** | **138,209,432** |

## 27. நிதிக் கையாலுகை (செலவினம்)

| விடயம் | 2014இல் முன்னேற்பாடுகள் ரூபாய்களில் | 2014இல் செலவினம் ரூபாய்களில் | சேமிப்புகள் அல்லது மிகைப்பாடுகள் ரூபாய்களில் |
|---|---|---|---|
| அ. மீண்டெழும் தவிர்ந்த கருத்திட்டம் | 708,000,000 | 670,825,613 | 37,174,387 |
| ஆ. மூலதனம் தவிர்ந்த கருத்திட்டம் | 222,675,000 | 177,786,902 | 44,888,098 |
| இ. கருத்திட்டம் உள் நாட்டு நிதியளிப்பு | 455,000,000 | 441,144,104 | 13,855,896 |
| ஈ. கருத்திட்டம் வெளிநாட்டு நிதியளிப்பு | 31,499,115 | 22,583,728 | 8,915,387 |
| **மொத்தம்** | **1,417,174,115** | **1,312,340,347** | **104,833,768** |

## 28. நிதிக் கையாலுகை விபரம் (உருவாக்கப்பட்ட வருமானம்)

| வருமான மூலம் | 2014இல் முன்னேற்பாடுகள் ரூபாய்களில் | 2014இல் சேகரிப்புகள் ரூபாய்களில் | பற்றாக்குறை அல்லது மிகை |
|---|---|---|---|
| ஆ. பட்டப் படிப்பு கற்கைகள் | - | 7,590,250 | - |
| ஆ. பட்ட பின்படிப்பு கற்கைகள் | - | 14,210,507 | - |
| இ. அறிவுரைகள் | - | - | - |
| ஈ. வேறு | - | 64,598,889 | - |
| **மொத்தம்** | **-** | **86,399,646** | **-** |

## 29. நிதியியல் போக்கின் பகுப்பாய்வு– 2014

| விடயம் | சூத்திரம் | ஒரு மாணவனுக்கான செலவினம் ரூபாய்களில் |
|---|---|---|
| அ. ஒரு மாணவனுக்கான மீண்டெழும் செலவினம்(மீசெ) | மீசெ,மாணவனின் எண். வலு | 234,882.92 |
| ஆ. ஒரு மாணவனுக்கான மூலதன செலவீனம்(மூசெ) | மூசெ,மாணவனின் எண். வலு | 48,392.66 |
| **மொத்தம்** | | **283,275.58** |

## ஒவ்வொரு மாணவனுக்குமான பீடரிதியான செலவு 2010-2014

**(மஹாபொல கொடுப்பனவு மற்றும் மாணவ உதவிப்பணம் உட்பட)**

| பீடம் | ஒவ்வொரு மாணவனுக்குமான செலவு (ரூபாய்களில்) | | | | |
|---|---|---|---|---|---|
| | **2010** | **2011** | **2012** | **2013** | **2014** |
| விவசாய மற்றும் பெருந் தோட்ட முகாமைத்துவ பீடம் | 256,350.77 | 288,119.98 | 336,214.07 | 331,148.20 | 331,530.51 |
| பிரயோக விஞ்ஞானம் | 250,292.34 | 270,115.82 | 323,446.62 | 312,817.53 | 317,772.87 |
| வியாபாரம் முகாமைத்துவம் மற்றும் நிதிப் பீடம் | 163,537,26 | 178,654.05 | 208,554.66 | 195,487.07 | 171,190.70 |
| கால்நடை மீன் பிடி மற்றும் உணவூட்டல் பீடம் | 295,012.88 | 322,380.81 | 374,896.40 | 349,456.13 | 365,408.97 |



## 30.கருத்திட்டங்களின் விபரங்கள் (உள்நாட்டு நிதியளிப்பு) - 2014

| பெயர் மற்றும் விபரம் | கடன் அல்லது மானியம் | நிதி முகவர் | டீ சி ஈ ரூபாய்களில் | ஆர் எப் ஏ ரூபாய்களில் | டீ எப் ரூபாய்களில் |
|---|---|---|---|---|---|
| விரிவுரை அரங்கு (நிலை 2 தோற்றமைவு 1 மற்றும் நிலை 2 தோற்றமைவு 2) - பிரயோக விஞ்ஞானங்கள் பீடம் குளியாப்பிட்டிய | - | ஜி ஓ எஸ் எல் | 118,200,000 | - | - |
| விரிவுரை அரங்கு (நிலை 2 தோற்றமைவு 1 மற்றும் நிலை 2 தோற்றமைவு 2) - கால்நடை மீன் பிடி மற்றும் உணவூட்டல் பீடம், மஹாகந்துர | - | ஜி ஓ எஸ் எல் | 97,000,000 | - | - |
| வைத்திய நிலையம் நிலை 2 குளியாப்பிட்டிய | - | ஜி ஓ எஸ் எல் | 17,500,000 | - | - |
| வைத்திய நிலையம் நிலை 1 - மஹாகந்துர | - | ஜி ஓ எஸ் எல் | 7,500,000 | - | - |
| விரிவுரை அரங்கு நிலை 1 - வியாபாரம் முகாமைத்துவம் மற்றும் நிதிப் பீடம் - குளியாப்பிட்டிய | - | ஜி ஓ எஸ் எல் | 165,000,000 | - | - |
| திருமணமாகாத கல்விசார் பணிக் குழுவினருக்கான பணிக் குழு விடுதி – மஹாகந்துர | - | ஜி ஓ எஸ் எல் | 49,000,000 | - | - |
| திருமணமாகாத கல்விசார் பணிக் குழுவினருக்கான பணிக் குழு விடுதி – குளியாப்பிட்டிய | - | ஜி ஓ எஸ் எல் | 49,000,000 | - | - |
| விரிவுரை அரங்கு நிலை 2 - விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடம் மஹாகந்துர | - | ஜி ஓ எஸ் எல் | 125,000,000 | - | - |
| விடுதி நிலை 4 குளியாப்பிட்டிய | - | ஜி ஓ எஸ் எல் | 69,000,000 | - | - |
| விடுதி நிலை 5 மஹாகந்துர | - | ஜி ஓ எஸ் எல் | 69,000,000 | - | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விடுதி நிலை 6 மஹாகந்துர | - | ஜி ஓ எஸ் எல் | 69,000,000 | - | - |
| மஹாகந்துர வளாகத்திற்கு பிரவேசிக்கும் வீதி | - | ஜி ஓ எஸ் எல் | 23,400,000 | | |
| விளையாட்டு மைதான மேம்படுத்தல் - குளியாப்பிட்டிய | - | ஜி ஓ எஸ் எல் | 50,000,000 | | |
| பீடக் கட்டிடம் நிலை 3 – கால்நடை மீன்பிடி மற்றும் உணவூட்டல் பீடம் - மஹாகந்துர | - | ஜி ஓ எஸ் எல் | 169,500,000 | | |
| வைத்திய நிலையம் நிலை 2, மஹாகந்துர | - | ஜி ஓ எஸ் எல் | 17,500,000 | | |
| விரிவுரை அரங்கு (நிலை 3 - இறுதி) – பிரயோக விஞ்ஞான பீடம் குளியாப்பிட்டிய | - | ஜி ஓ எஸ் எல் | 367,000,000 | | |
| நிருவாக கட்டிட நிலை – 2 குளியாப்பிட்டிய | - | ஜி ஓ எஸ் எல் | 100,000,000 | | |
| உணவக கட்டடக் கூறு நிலை - 1 குளியாப்பிட்டிய | - | ஜி ஓ எஸ் எல் | 45,000,000 | | |
| உடற் கல்வி கூடம் | - | ஜி ஓ எஸ் எல் | 250,000,000 | | |
| அரங்கு | - | ஜி ஓ எஸ் எல் | 205,000,000 | | |
| நுண் அலகு தொழில்நுட்ப விஞ்ஞான கூடம் | - | ஜி ஓ எஸ் எல் | 30,000,000 | | |

## 31.கருத்திட்ட செலவு விபரங்கள் (உள்நாட்டு நிதியளிப்பு)

| பெயர் | ரீ சி ஈ ரூபாய்களில் | 2013ல் செலவு ரூபாய்களில். | 2014ல் செலவு ரூபாய்களில். | 31.12.2014 ல் திரண்ட செலவு | பௌதீக செயற்பாடுகள் வீதம் |
|---|---|---|---|---|---|
| **கட்டிட நிர்மான கருத்திட்டங்கள் - தொடர்ச்சி** | | | | | |
| பீடக் கட்டிடம் நிலை 2(தோற்றமைவு 1 மற்றும் 2) பிரயோக விஞ்ஞானங்கள் பீடம் | 118,200,000 | 2,849,595 | 47,284,970 | 50,134,565 | 100 வீதம் |
| பீடக் கட்டிடம் நிலை 1, வியாபாரம் முகாமைத்துவம் மற்றும் நிதிப் பீடம் | 165,000,000 | 27,775,426 | - | 96,242,202 | 100 வீதம் |
| வைத்திய நிலையம் நிலை 1, மஹாகந்துர | 7,500,000 | | 2,964,679 | 8,142,314 | 100 வீதம் |
| வைத்திய நிலையம் நிலை 2 குளியாப்பிட்டிய | 17,500,000 | 4,013,960 | 94,548, | 5,965,424 | 100 வீதம் |
| திருமணமாகாத கல்விசார் பணிக் குழுவினருக்கான பணிக் குழு விடுதி – குளியாப்பிட்டிய | 49,000,000 | 1,891,645 | 2,161,645 | 12,586,811 | |
| மஹாகந்துர வளாகத்திற்கு பிரவேசிக்கும் வீதி நிலை 1 | 23,400,000 | 15,618,632 | 4,199,396 | 19,818,028 | 100 வீதம் |
| திருமணமாகாத கல்விசார் பணிக் குழுவினருக்கான பணிக் குழு விடுதி - மஹாகந்துர | 49,000,000 | 16,042,762 | - | 21,267,670 | 100 வீதம் |
| பீடக் கட்டிடம் நிலை 2 - விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடம், மஹாகந்துர | 125,000,000 | 21,789,729 | 21,480,880 | 147,599,501 | 100 வீதம் |
| நிருவாக கட்டிட தொகுதி – குளியாப்பிட்டிய | - | - | 3,255,000 | 88,568,297 | 100 வீதம் |
| விடுதி நிலை 4 குளியாப்பிட்டிய | 69,000,000 | 18,642,177 | 8,718,999 | 50,217,169 | 100 வீதம் |
| விடுதி நிலை 5 6 - மஹாகந்துர | 69,000,000 | 16,067,689 | 32,068,475 | 70,125,622 | 100 வீதம் |
| புல் நாட்டுதல் மற்றும் விளையாட்டு மைதானத்தின் ஏனைய மேம்பாடுகள் - குளியாபிட்டிய | 50,000,000 | 7,578,665 | 6,132,118 | 22,925,024 | 65 வீதம் |
| பீடக்கட்டிடம் - கால்நடை மீன்பிடி மற்றும் உணவூட்டல் பீடம் - மஹாகந்துர | 169,500,000 | 27,416,906 | 19,717,982 | 47,822,850 | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உணவக கட்டடக் கூறு நிலை - 1 குளியாப்பிட்டிய | 45,000,000 | - | 10,998,441 | 10,998,441 | 85 வீதம் |
| **தயட்ட கிருல கருத்திட்டங்கள்** | | | | | |
| உடற் கல்வி கூடம் | 250,000,000 | 42,499,680 | 62,856.010 | 105,355,690 | 100 வீதம் |
| அரங்கு | 205,000,000 | 24,776,786 | 206,121,681 | 230,898,467 | 100 வீதம் |
| நுண் அலகு தொழில்நுட்ப விஞ்ஞான கூடம் | 30,000,000 | 2,993,304 | 13,089,275 | 16,082,579 | 95 வீதம் |
| **மொத்தம்** | | **229,956,956** | **441,144,099** | **1,004,750,653** | |

## 32. 2014 இல் பெற்றுக்கொள்ளப்பட்ட கீழ்க் கட்டமைப்பு விபரங்கள்

| கீழ் கட்டமைப்பு விபரங்கள் | செலவினம் ரூபாய்களில் | பௌதீக செயற்பாடுகள் |
|---|---|---|
| பீடக் கட்டிடம் - கால்நடை, மீன்பிடி மற்றும் உணவூட்டல்<br>நிலை 2(தோற்றமைவு 1)<br>நிலை 2(தோற்றமைவு 2) | 0<br>4,020,000 | 100வீதம் |
| பீடக் கட்டிடம்-பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்<br>நிலை 2(தோற்றமைவு 1)<br>நிலை 2(தோற்றமைவு 2) | 1,210,000<br>800,000 | 100 வீதம் |
| பீடக் கட்டிடம் - விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடம்(நிலை 2) | 21,480,000 | 100 வீதம் |
| பீட கட்டிடம் - வியாபார கற்கைகள் மற்றும் நிதிப் பீடம் (நிலை 1) | 13,400,000 | 100 வீதம் |
| சுகாதார நிலையம் நிலை 1, மஹாகந்துர | 2,310,000 | 100 வீதம் |
| சுகாதார நிலையம் நிலை 2 குளியாப்பிட்டிய | 0 | 100 வீதம் |
| திருமணமாகாத கல்விசார் பணிக் குழுவினருக்கான பணிக் குழு விடுதி – மஹாகந்துர | 0 | 100 வீதம் |
| திருமணமாகாத கல்விசார் பணிக் குழுவினருக்கான பணிக் குழு விடுதி – குளியாப்பிட்டிய | 0 | 75 வீதம் |
| விடுதி நிலை 4 குளியாப்பிட்டிய | 5,660,000 | 100 வீதம் |
| விடுதி நிலை 5 மஹாகந்துர | 19,290,000 | 100 வீதம் |
| விடுதி நிலை 6 மஹாகந்துர | 12,780,000 | 100 வீதம் |
| மஹாகந்துர வளாகத்திற்கு பிரவேசிக்கும் வீதி | 4,040,000 | 100 வீதம் |
| விளையாட்டு மைதான மேம்படுத்தல் குளியாப்பிட்டிய | 6,130,000 | 75 வீதம் |
| பீடக் கட்டிடம் நிலை 3 – கால்நடை மீன்பிடி மற்றும் உணவூட்டல் பீடம்- மஹாகந்துர | 8,950,000 | 25 வீதம் |
| சுகாதார நிலையம் நிலை 2, மஹாகந்துர | 3,690,000 | 30 வீதம் |
| விரிவுரை அரங்கு –<br>பிரயோக விஞ்ஞான பீடம் (நிலை 3 - இறுதி) குளியாப்பிட்டிய | 40,670,000 | 20 வீதம் |

| | | |
|---|---|---|
| நிருவாக கட்டிட நிலை – 2 குளியாப்பிட்டிய | 19,210,000 | - |
| உணவக கட்டடக் கூறு நிலை - 1 குளியாப்பிட்டிய | 10,990,000 | 85 வீதம் |
| உடற் கல்வி கூடம் | 51,590,000 | 100 வீதம் |
| அரங்கு | 168,180,000 | 100 வீதம் |
| நுண் அலகு தொழில்நுட்ப விஞ்ஞான கூடம் | 8,820,000 | 95 வீதம் |

## இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்

## <u>நிதிக் கூற்று 2014</u>

**<u>1971ன் நிதிச் சட்டத்தின் 38ம் இலக்கத்தின் 13(6) பிரிவின் படி இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் 2014 ஆம் ஆண்டின் நிதிக் கூற்று மற்றும் வருடாந்த கணக்குக் கூற்று ஆகியவற்றின் சட்டப்படியான அறிக்கைகள் வைத்துக்கொள்வது வேண்டப்படுகிறது</u>**

1. இந்தக் கணக்கு கூற்றுகளானது 1978ன் 16ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 106 (1) மற்றும் (பீ) ஆகிய பிரிவுகளின் பிரகாரமும் 1971ன் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் படியும் தயாரிக்கப்பட்டு சமர்பிக்கப்பட்டுள்ளது.

(1) இலங்கை பொது துறை நிருவனங்களின் கணக்கியல் கணக்கியல் நியமங்களுக்கு அமைவாகவும் பல்கலைக்கழகமொன்றில் வருடாந்த கணக்கிணக்க கூற்றை அளிக்கும் வழமையாக பின்பற்றப்படுகின்ற பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் நடை முறைகளுக்கு அமைவாகவும் இந்த கணக்கு அளிக்கைகள் மற்றும் விளக்கங்கள் ஆகியனவும் சீரமைப்புகள் மற்றும் நியதிகள் பராமரிப்பதற்கும் ஏற்ற வகையில் செய்யப்பட்டுள்ளன.

### <u>அ. நிதியியல் சிறப்புக் கூறுகள்</u>

#### (1) அரசாங்க மானியங்கள்

| | | 2014 | 2013 |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவிற்கான அரசாங்க மானியம் | ரூபா | 683,346,522 | 536,532,163 |
| மஹாபொல புலமைப் பரிசில்களுக்கான அரசாங்க மானியம் | ரூபா | 26,053,650 | 16,271,250 |
| மாணவ உதவிப் பண கொடுப்பனவுக்கான அரசாங்க மானியம் | ரூபா | 13,981,700 | 16,145,800 |
| மீண்டெழும் மானியம் (புணருத்தாபன வகை) | ரூபா | 2,773,842 | |
| | | | |
| மூலதனம் 101 புணருத்தாபனமும் மற்றும் மேம்பாடும் | ரூபா | 37,500,000 | 33,800,000 |
| மூலதனம் 102 சொத்துக்களை உள்ளெடுத்தல் | ரூபா | 142,575,000 | 65,300,000 |
| மூலதனம் 103 நிருமானப் பணிக்கான கருத்திட்டங்கள் | ரூபா | 443,000,000 | 255,250,000 |
| வேறு மூலதன மானியம் | ரூபா | 25,324,867 | 800,000 |
| **மொத்தம்** | ரூபா | **1,374,555,581** | **924,099,213** |

## இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்

## நிதிக் கூற்று 2014

| பட்டப்பின்படிப்பு பாடநெறிகள் | | 2014 | 2013 |
|---|---|---|---|
| முது நிலை வியாபார நிருவாக மானி பாடநெறி பீ எஸ் எப் | ரூபா | 10,304,590 | 7,940,000 |
| பட்டப் பின்படிப்பு டிப்ளோமா பீ எஸ் எப் | ரூபா | 3,905,917 | 9,642,200 |
| **வெளிவாரி பட்டப்படிப்பு பாட நெறிகள்** | | | |
| பெருந் தோட்ட முகாமைத்துவத்தில் வெளிவாரி பட்டப்படிப்பு – மஹாகந்துர | ரூபா | 7,590,250 | 5,470,300 |
| **டிப்ளோமா பாட நெறிகள்** | | | |
| ஆங்கிலத்தில் டிப்ளோமா | ரூபா | 7,848,133 | 9,753,200 |
| காப்புறுதியில் டிப்ளோமா – பீ எஸ் எப் | ரூபா | 6,087,500 | 4,732,500 |
| காப்புறுதியில் உயர் டிப்ளோமா | ரூபா | 2,197,000 | 1,619,000 |
| **சான்றிதழ் பாட நெறிகள்** | | | |
| தகவல் தொழில் நுட்பத்தில் சான்றிதழ் - குளியாப்பிட்டிய | ரூபா | 237,800 | 550,600 |
| வெளிவாரி கணணி பாடநெறி – மஹாகந்துர | ரூபா | 3,794,600 | 4,753,300 |
| **ஆராய்ச்சி மானியங்கள்** | | | |
| என் எஸ் எப் மானியம் | ரூபா | 8,924,055 | 3,697,000 |
| ஐ யூ சி என் கருத்திட்டம் | ரூபா | - | - |
| சி ஏ ஆர் பி கருத்திட்டம் | ரூபா | 1,644,536 | - |
| எஸ் ஏ என் டி ஈ ஈ | ரூபா | 1,070,268 | - |
| மீண்டெழும் மானியம் (மூலதன வகை) | ரூபா | 755,006 | - |
| புத்தாக்க ஆராய்சி மானியம் | ரூபா | 3,593,312 | - |
| என் சி ஏ எஸ் | ரூபா | 1,500,00 | - |
| **ஏனைய மானியங்கள்** | | | |
| ஐ டி ஆர் சி | ரூபா | 17,282,354 | 20,904,248 |
| பணிக்குழு அபிவிருத்தி நடவடிக்கைகள் | ரூபா | 2,000,000 | |
| டப்பிளியூ ஐ என் சி | ரூபா | 7,664,325 | |
| **மொத்தம்** | **ரூபா** | **86,399,646** | **69,062,048** |

(2) 2014 ஆம் ஆண்டில் வருமானத்தை விட மேலதிகமான செலவாக (101,915,818.73) ஆகவிருந்த அதே நேரத்தில் அது 2013ஆம் ஆண்டில் அது (135,852,594.55) ஆகவிருந்தது

(3) மிகுதிப் பணமானது கடன்களில் இருந்தும் மற்றும் முற்பணமாக இந்த பல்கலைக்கழகத்தில் ஊழியர்களுக்கு முற்ப் பணமாக கொடுக்கப்பட்ட ரூபா 45,633,554.94 விலிருந்து மீளப்பெறப்பட இருக்கிற அது கடந்த வருடத்தில் ரூபா 27,861,660.21 ஆகவிருந்தது

(4) பல்கலைக்கழகத்தினால் பெறுமதி குறைக்கப்பட்ட நிதியானது முதலிடப்பட்டுள்ளதாக ஐந்தொகையில் அல்லது இருப்பு நிலைக் குறிப்பில் குறிப்பிடப்படுவதோடு அது ரூபா 39,391,173.23 இருந்த அதே வேளை 2013ஆம் ஆண்டில் அது ரூபா 22,696,269.16 ஆகவிருந்தது

## இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்

## <u>நிதிக் கூற்று 2014</u>

(5) உள்ளக வருமான மூலம்

| 2013 ரூபாய்களில் | 2014 ரூபாய்களில் | மாற்றம் ரூபாய்களில் | மாற்றம் வீகிதத்தில் |
|---|---|---|---|
| 9,595,083.80 | 16,451,043.70 | 6,855,959.90 | 71.45வீதம் |

**அ.** பல்கலைக்கழகத்தினால் பேணப்பட்டு வரும் வங்கிக் கணக்கு மீதியின் படி ஐந்தொகையில் அல்லது இருப்பு நிலைக் குறிப்பில் காசேட்டில் கணக்கு இணக்கம் செய்யப்பட்டுள்ளது. குறித்த வங்கிகள் அதனுடைய உறுதி கூறப்பட்ட மிகுதிகளை கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பி வைப்பதற்கு கேட்டுக் கொள்ளப்பட்டது. இந்த தொகை குறுகிய கால செயல் திட்டங்களுக்கு சமமாக இருக்கின்றது.

**ஆ.** பொருட்கள் பெறுமதி கணக்கெடுப்பின் போது ஐந்தொகையில் அல்லது இருப்பு நிலைக் குறிப்பில் தொகையானது ரூபா 22,958,427.26 பௌதீக மெய்மை அறிதீடு ஆகக் காட்டியது இந்த மெய்மை அறிதீடு கணக்கிருப்பு புத்தகத்தில் பேணப்படுகின்ற பதிவுகளும் மற்றும் தற்போதுள்ள பொருட்களின் பெறுமதியும் அப்பொருட்களுக்குரிய சொந்த தன்மையை உறுதி கூறுவதற்கு இந்த மெய்மை அறிதீடு செய்யப்பட்டது. இருப்புக்களின் மெய்மை அறிதீடு கணக்குப் புத்தகங்களுக்கு எடுக்கப்பட்டு மிகைகளும் குறை பாடுகளும் நீக்கப்பட்டு மெய்மை அறிதீட்டுக் இணக்கம் செய்யும் கணக்கில் சரி செய்யப்பட்டு இருப்பில் உள்ள மிகைகளும் குறைபாடுகளும் புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டன.

**இ.** ஐந்தொகையில் அல்லது இருப்பு நிலைக்குறிப்பில் காட்டப்பட்டுள்ளவாறு நடந்து கொண்டிருக்கும் செயற்ப்பாடுகளின் பெறுமதியானது ரூபா 606,404,460.49. இங்கு நடந்து கொண்டிருக்கும் செயற்பாடுகளின் பெறுமதியானது இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாகவே எடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**ஈ.** 2014ஆம் ஆண்டு பொது நிதியில் ஒதுக்கப்பட்டு காட்டப்படும் மிகுதியானது ரூபா 948,026,343 அது 2013ஆம் ஆண்டோடு ஒப்பிடும் போது அது ரூபா 846,625,186.66 ஆக காணப்பட்டது. இதன் பெறு பேறாக தேய்மானம் மற்றும் சேவைப் பணிக்கொடுப்பனவு ஆகியன ஐந்தொகை அல்லது இருப்பு நிலைக்குறிப்பில் உள்ள பொது ஒதுக்கு கணக்குகளில் காட்டப்பட்டு சரிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் 2014ஆம் ஆண்டுக்குரிய தேய்மானக் கணக்கில் உள்ள பின்வரும் தகவல்கள் மிகவும் முக்கியமாக கருதப்படுவது குறிப்பிடத்தக்கது.

வருடாந்த கணக்கில் உள்ள தேய்மானம் செயற்பாட்டு ரீதியான கோட்ப்பாட்டுக்கு அமைவாக பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் 1995ஆம் ஆண்டு ஒக்டொபர் 5ஆம் திகதிக்குரிய 649ஆம் இலக்க சுற்றறிக்கை இவ்வாண்டு மீளாய்வுக்கு பயன்படுத்தப்படுகின்றது. 2014ஆம் ஆண்டின் முழு மொத்த தேய்மானத்தின் பெறுமதியானது ரூபா 130,977,795.83 ஆகும்.

**உ.** முன்னேற்பாடாக கிடைத்த ரூபா 89,904,407.50 ஆகிய 2014 டிசம்பர் 31இல் ஓய்வூதிய பணிக்கொடை கொடுப்பனவாக மேற் கொள்ளப்பட்டது. இந்த முன்னேற்பாடுகள் பணிக் கொடை கொடுப்பனவு சட்டத்திற்கேற்பவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பணிப்புரைக்கேற்பவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது இந்த முன்னேற்பாடுகளுக்கு சமனான முதலீடு கிடைக்கப் பெறவில்லை.

# இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்

## நிதிக் கூற்று 2014

**ஆ. பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டு நிகழ்ச்சியானது ஒரு செயல் திறன் மிக்க நிதியியல் முகாமைத்துவ கருவியாக இவ்வருட காலப்பகுதிக்குள் பயன் படுத்தப்பட்டது.

**இ. இயந்திர சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள்**

**நிரந்தர ஆஸ்தி பதிவீடு**

இந்த நடைமுறையானது சமகாலத்திற்கு ஏற்றவாறு பல்கலைக்கழகத்தினால் நடைமுறையில் பயன்படுத்தப்படுகின்ற நிரந்தர ஆஸ்தி பதிவேடுகள் பாரமெடுக்கப்பட்டன.

**ஈ. கட்டுப்பாட்டு கணக்குகளின் இணக்குவித்தல்**

சகல கட்டுப்பாட்டு கணக்குகளும் இணக்குவித்தல் செய்யப்பட்டுள்ளதுடன் மற்றும் அந்த விபரப் பட்டியல்கள் நிதிக் கூற்றுகளுடன் தயாரிக்கப்பட்டு சமர்பிக்கப்படுகின்றன.

**பொதுவானவை**

முடிவாக, நான் முக்கிமாக குறிப்பிட வேண்டியது யாதெனில் விலையுயர்சியின் பிரதிபலிப்பாக பல இன்னல்களுடன் மற்றும் எணிக்கையற்ற ஏனைய காரணிகள் 2014ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் பல்கலைக்கழகத்தினால் எதிர் கொள்ளப்பட்டது. எவ்வாறு இருந்த போதிலும் இந்த சகல தடைகளும் எல்லா வகைகளிலும் சகல பொறுப்புக்களையும் தோள்களில் சுமந்து கல்விசார் மற்றும் கல்விசாரா நிகழ்ச்சிகளை அதன் இலக்குகளை வெற்றிகரமாக அடைந்து கொள்வதற்கு 2014ஆம் ஆண்டிற்கான உயர் கல்வித் திட்டத்தை அடைந்து கொள்வதற்கு பல்கலைக்கழகம் பிரயத்தனம் செய்தது.

**பேராசிரியர் எஸ் ஜே பீ ஏ ஜெயசேகர,**

உபவேந்தர்,

இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் குளியாப்பிட்டிய,

2015 பெப்ரவரி 24ஆம் திகதி

# இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்

## 2014 டிசம்பர் 31இல் முடிந்த வருடத்திற்கான காசுப் பாச்சல் கூற்று

| | | 2014 டிசம்பர் 31இல் | | 2013 டிசம்பர் 31இல் | |
|---|---|---|---|---|---|
| **ஆஸ்திகள்** | | | | | |
| **நடைமுறைச் சொத்துகள்** | **குறிப்பு** | | | | |
| வங்கியில் பணம் | **1** | 95,444 | | 59,274 | |
| சேமிப்பு வைப்புகள் | **2** | 919 | | 376 | |
| வியாபாரமும் மற்றும் ஏனைய பெற்றுக் கொள்ள கூடியவைகளும் | **3** | 1,852 | | 1,088 | |
| ஜாபிதாக்களும் இருப்புகளும் | **4** | 22,958 | | 22,729 | |
| முற்ப் பணங்கள் | | 2,877 | | 2,151 | |
| பணிக்குழுவிற்கான முற்ப் பணங்கள் | **5** | 387 | | 595 | |
| மூலதன முற்பணங்கள் | **6** | 144,650 | | 173,754 | |
| சேவைகளுக்கும் மற்றும் வழங்களுக்குமான முற்ப் பணங்கள் | **7** | 884 | | 2,252 | |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | **8** | 6,894 | | 6,723 | |
| | | | 276,865 | | 268,942 |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | | | |
| முதலீடுகள் - நீண்ட காலம் | **9** | 39,391 | | 22,696 | |
| சொத்துக்கள், இயந்திர சாதனம் மற்றும் உபகரணம் | **10** | 1,156,324 | | 957,663 | |
| நடைமுறையில் உள்ள வேலை | **11** | 606,404 | | 291,448 | |
| பணிக்குழுவிற்கான கடன்கள் | **12** | 45,247 | 1,847,366 | 27,267 | 1,299,074 |
| **மொத்த ஆஸ்திகள்** | | | 2,124,231 | | 1,568,016 |
| **பொறுப்புக்கள்** | | | | | |
| **நடைமுறை பொறுப்புகள்** | | | | | |
| நானாவீத கடன் கொடுத்தவர்கள் | **13** | 12,231 | | 23,729 | |
| வைப்புகள் | **14** | 1,153 | | 2,269 | |
| செலவு கடன் கொடுத்தவர்கள் | **15** | 18,208 | | 22,868 | |
| ஏனையவை | **16** | 119,737 | 151,329 | 110,654 | 159,520 |
| **நடைமுறையற்ற பொறுப்புகள்** | | | | | |
| மூலதனம் - செலவளித்த மூலதன மானியம் | | 1,949,564 | | 1,631,610 | |
| மூலதனம் - செலவளித்த மானியம் அல்லது நடைமுறையில் உள்ள வேலை | | 606,404 | | 291,448 | |
| செலவளிக்காத மூலதன மானியம் | **17** | 12,754 | | 39 | |
| விஷேட மானியம் | | 200,790 | | 200,373 | |
| நன் கொடை நிதி | **18** | 763 | | 666 | |
| விஷேட நிதி | **19** | 26,533 | | 21,729 | |
| பணிக்கொடைக்கான முன்னேற்பாடுகள் | | 89,904 | 2,886,712 | 75,041 | 2,220,906 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | | 3,038,041 | | 2,380,426 |
| **மொத்த தேறிய ஆஸ்திகள்** | | | **(913,810)** | | **(812,410)** |

## இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்

**<u>நிதிக் கூற்று 2014</u>**

ரூபா ஆயிரங்களில்

12ஆம் பக்கத்தில் இருந்து தொடரப்பட்ட கணக்கியல் நிலைக்கூற்று

| | 2014 டிசம்பர் 31இல் | | 2013 டிசம்பர் 31இல் | |
|---|---|---|---|---|
| **தேறிய ஆஸ்திகள் நிகர மதிப்பு** | | | | |
| திரண்ட நிதி | (948,026) | | (846,626) | |
| ஒதுக்குகள் | 34,216 | 913,810 | 34,216 | (812,410) |
| **மொத்த தேறிய ஆஸ்திகள்** | | **(913,810)** | | **(812,410)** |

| பேராசிரியர் எஸ் ஜே பீ ஏ ஜெயசேகர | திரு ஜி பியரத்ன | திரு டீ ஏ யூ தர்மதாச |
|---|---|---|
| உபவேந்தர், | பதிவாளர் | நிதியாளர் |
| இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் , குளியாப்பிட்டிய. | இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் , குளியாப்பிட்டிய. | இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் , குளியாப்பிட்டிய. |

2014 பெப்ரவரி 18ஆம் திகதி

# இலங்கை வயம்ப பல்கலைக் கழகம்

## 2014 டிசம்பர் 31இல் முடிந்த வருடத்திற்கான நிதிச் செயற்பாட்டு கூற்று

| | இந்த வருடம் 2014 ரூபா ஆயிரங்களில் | கடந்த வருடம் 2013 ரூபா ஆயிரங்களில் |
|---|---|---|
| **வருமானங்கள்** | | |
| மீண்டெழும் செலவிற்கான அரசாங்க மானியம் | 683,346 | 536,532 |
| மாணவர்உதவிப்பணக் கொடுப்பனவிற்கான அரசாங்க மானியம் | 13,982 | 16,146 |
| மஹாபொல புலமைப் பரிசில்களுக்கான அரசாங்க மானியம் | 26,053 | 16,271 |
| மீண்டெழும் மானியம் (புணருத்தாபன வகை) | 2,774 | 1,119 |
| முதலீடுகளுக்கான வட்டி | 1,506 | 34 |
| பணிக்குழுவிற்கு கொடுத்த கடன்களுக்கான வட்டி | 1,227 | 1,057 |
| சொத்துக்களில் இருந்து கிடைத்த வாடகை | 1,116 | 808 |
| பழய இருப்புகளை விற்றல் | 291 | 1,621 |
| உற்ப்பத்திகளை விற்றல் | 504 | 642 |
| நானாவீத கிடைப்பனவுகள் | 9,299 | 3,530 |
| பதிவுக் கட்டணம்(பட்டப் படிப்புகள்) | 2,325 | 1,730 |
| பரீட்சை கட்டணம்(பட்டப் படிப்புகள்) | 55 | 62 |
| நூலக தண்டப் பணங்கள் | 129 | 111 |
| **மொத்த வருமானம்** | **742,607** | **579,663** |
| **செலவுகள்** | | |
| தனியாள் வருமானம் (குறிப்பு 01) | 467,368 | 386,683 |
| பயணங்கள் | 3,692 | 1,763 |
| வழங்கல்கள் மற்றும் நுகர் அல்லது எரிப் பொருள் பாவித்தது | 35,805 | 30.632 |
| பராமரிப்புகள் | 15,220 | 9,552 |
| ஓப்பந்த சேவைகள் | 120, 511 | 114,608 |
| தேய்மானங்கள் | 130,887 | 120,963 |
| ஏனைய செலவுகள் | 28,230 | 17,779 |
| மஹாபொல மற்றும் மாணவ உதவிப் பண கொடுப்பனவுகள் | 40,035 | 32,417 |
| புணருத்தாபன செலவீடுகள் (மீண்டெழும் வகை) | 2,774 | 1,119 |
| நிதிச் செலவு | | - |
| **மொத்த செலவுகள்** | **844,522** | **715,516** |
| இந்தக் காலப்பகுதிக்குள் நிலுவை அல்லது (பற்றாக்குறை) | **(101,915)** | **(135,853)** |

## இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்

## <u>நிதிக் கூற்று 2014</u>

14ஆம் பக்கத்தில் இருந்து தொடரப்பட்ட கணக்கியல் நிலைக்கூற்று

**நிதிச் செயற் பாட்டின் கூற்று**

| | இந்த வருடம் 2014 ரூபா ஆயிரங்களில் | கடந்த வருடம் 2013 ரூபா ஆயிரங்களில் |
|---|---|---|
| முன்னைய வருடத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட மிகுதி | (846,626) | (712,426) |
| வருடத்திற்கான பற்றாக்குறை | (101,915) | (135,853) |
| கூட்டல் : கடந்த வருடத்திற்குரிய வருமானம் | | |
| ஏனைய சரிப்படுத்தல்கள் | 515 | 1,653 |
| கழித்தல் : கடந்த வருடத்திற்கு உரிய வேதனம் | | |
| ஏனைய சரிப்படுத்தல்கள் | | |
| பொது ஒதுக்கு விலை கேழ்வு | **(948,026)** | **(846,626)** |

**குறிப்பு 01**

| | | |
|---|---|---|
| சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் | 182,270 | 173,101 |
| மேலதிக நேர மற்றும் விடுமுறை தின வேதனம் | 13,439 | 11,517 |
| ஏனைய கொடுப்பனவுகள் | 200,814 | 144,539 |
| ஓய்வூதிய நலன்கள் (யூ பி எப், ஈ ரீ எப், ஓய்வூதியம், பணிக் கொடைக் கொடுப்பனவு) | 70,845 | 57,526 |
| **மொத்த தனியார் வருமானங்கள்** | **467,368** | **386,683** |

| | | |
|---|---|---|
| பேராசிரியர் எஸ் ஜே பீ ஏ ஜெயசேகர<br>உபவேந்தர்,<br><br>இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் ,<br>குளியாப்பிட்டிய.<br>2014 பெப்ரவரி 18ஆம் திகதி | திரு ஜி பியரத்ன<br>பதிவாளர்<br><br>இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் ,<br>குளியாப்பிட்டிய. | திரு டீ ஏ யூ தர்மதாச<br>நிதியாளர்<br><br>இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் ,<br>குளியாப்பிட்டிய. |

,

# இலங்கை வயம்ப பல்கலைக் கழகம்

## 2014 டிசம்பர் 31இல் முடிந்த வருடத்திற்கான நிதிச் செயற்பாட்டு கூற்று

ரூபா ஆயிரங்களில்

| | மானியம் | ஒதுக்கு | கட்டுப்படுத்தப்பட்டது | மொத்தம் |
|---|---|---|---|---|
| **31.12.2009 திகதிக்கான மிகுதி** | **1,094.54** | **(322.32)** | **38.52** | **810.74** |
| 2010ஆம் ஆண்டுக்கான அரசாங்க மானியம் அல்லது ஏனைய மானியம் | 220.33 | | 6.86 | 227.19 |
| 2010ஆம் ஆண்டுக்கான பற்றாக்குறை | | 130.51 | | 130.51 |
| **31.12.2010 திகதிக்கான மிகுதி** | **1,314.87** | **452.83** | **45.38** | **907.42** |
| 2011ஆம் ஆண்டுக்கான அரசாங்க மானியம் அல்லது ஏனைய மானியம் | 180.88 | | 16.60 | 197.48 |
| 2011ஆம் ஆண்டுக்கான பற்றாக்குறை | | (100.27) | | (100.27) |
| **31.12.2011 திகதிக்கான மிகுதி** | **1,495.75** | **553.10** | **61.98** | **1,004.63** |
| 2012ஆம் ஆண்டுக்கான அரசாங்க மானியம் அல்லது ஏனைய மானியம் | 267.73 | | 17.72 | 285.45 |
| 2012ஆம் ஆண்டுக்கான பற்றாக்குறை | | 125.11 | | 125.11 |
| **31.12.2012 திகதிக்கான மிகுதி** | **1,763.48** | **(678.21)** | **79.70** | **1,164.96** |
| 2013ஆம் ஆண்டுக்கான அரசாங்க மானியம் அல்லது ஏனைய மானியம் | 359.99 | | 17.74 | 377.73 |
| 2013ஆம் ஆண்டுக்கான பற்றாக்குறை | | (134.20) | | (134.20) |
| **31.12.2013 திகதிக்கான மிகுதி** | **2,123.47** | **(812.41)** | **97.44** | **1,408.50** |
| 2014ஆம் ஆண்டுக்கான அரசாங்க மானியம் அல்லது ஏனைய மானியம் | 646.04 | | 19.76 | 665.81 |
| 2014ஆம் ஆண்டுக்கான பற்றாக்குறை | | (101.40) | | (101.40) |
| **31.12.2014 திகதிக்கான மிகுதி** | 2,769.51 | (913.81) | 117.20 | 1,972.90 |

## இலங்கை வயம்ப பல்கலைக் கழகம்
## 2014 டிசம்பர் 31இல் முடிந்த வருடத்திற்கான காசுப் பாச்சல் கூற்று

| | 31.12.2014இல் ரூபா ஆயிரங்களில் | 31.12.2013இல் ரூபா ஆயிரங்களில் |
|---|---|---|
| **செயற்பாட்டு நடைமுறைகளில் காசுப்பாச்சல்** | | |
| சாதாரண செயற்பாடுகளில் இருந்து நிலுவை அல்லது (பற்றாக்குறை) | (101,915) | (135,853) |
| **கூட்டல் : காசு அற்ற பாச்சல்கள்** | | |
| தேய்மானங்கள் | 130,887 | 120,963 |
| பணிக் கொடைக்கான முன்னேற்பாடுகள் | 17,267 | 11,196 |
| பணிக் கொடை செலுத்தப்பட்டது | (2,404) | (2,927) |
| முன்னைய வருடத்திற்கான சரிப்படுத்தல்கள் - கடந்த வருடங்களுக்கான வேதனம் | 515 | 1,653 |
| கடன் கொடுத்தவர்களில் அதிகரிப்பு அல்லது குறைப்பு | | |
| இருப்புகளில் அதிகரிப்பு அல்லது குறைப்பு | (229) | (5,213) |
| கடன் கொடுத்தவர்களில் அதிகரிப்பு அல்லது குறைப்பு | (764) | (89) |
| பணிக்குழுவிற்கான கடன்களில் அதிகரிப்பு அல்லது குறைப்பு | (17,980) | (1,717) |
| பணிக்குழுவிற்கான முற்பண அதிகரிப்பு அல்லது குறைப்பு | 208 | 372 |
| வழங்கள் மற்றும் சேவைகள் முற் கொடுப்பனவுகளில் அதிகரிப்பு அல்லது குறைப்பு | 1,368 | (1,111) |
| முற் கொடுப்பனவுகளில் அதிகரிப்பு அல்லது குறைப்பு | (726) | (810) |
| மூலதன முற்கொடுப்பனவுகளில் அதிகரிப்பு அல்லது குறைப்பு | 29,104 | (113,843) |
| ஏனைய நடைமுறை சொத்துகளில் அதிகரிப்பு அல்லது குறைப்பு | (171) | (1,788) |
| நானாவீத கடன் கொடுத்தவர்களில் அதிகரிப்பு அல்லது குறைப்பு | (11,498) | 9,748 |
| வைப்புகளில் அதிகரிப்பு அல்லது குறைப்பு | (1,116) | (622) |
| கடன் கொடுத்தவர்கள் செலவில் அதிகரிப்பு அல்லது குறைப்பு | (4,660) | 8,496) |
| ஏனைய நடைமுறை பொறுப்புகளில் அதிகரிப்பு அல்லது குறைப்பு | 9,083 | 61,517 |
| **செயற்பாட்டு நடைமுறைகளில் தேறிய காசுப்பாச்சல்** | **46,969** | **(50,028)** |
| **செயற்பாட்டு நடைமுறைகளில் தேறிய காசுப்பாச்சல்** | **46,969** | **(50,028)** |

## மூலதனமிடுதலில் செயற்பாடுகளில் காசுப்பாச்சல்

| | | |
|---|---|---|
| சொத்துக்களுக்காக சேர்க்கப்பட்ட யந்திர உபகரணங்கள் | (329,548) | (100,561) |
| கட்டுப்படுத்தப்பட்ட நிதி மூலதனங்கள் | (16,695) | (5,854 |
| செயற்பாட்டில் உள்ள வேலை | (314,957) | (182,444) |
| சேமிப்பு வைப்புகள் | (543) | (34) |
| நன் கொடை நிதி | 97 | 270 |
| **மூலதனமிடுதலில் செயற்பாடுகளில் தேறிய காசுப்பாச்சல்** | **(661,646)** | **(288,623)** |

(17ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

| | 31.12.2014இல் ரூபா ஆயிரங்களில் | 31.12.2013இல் ரூபா ஆயிரங்களில் |
|---|---|---|
| **நிதியிடல் செயற்பாடுகளில் காசுப் பாச்சல்** | | |
| மூலதன மானியம் : புணருத்தாபனம் மற்றும் மேன்பாடுகள் | 37,500 | 32,000 |
| மூலதன மானியம் : சொத்துக்கள் கிடைப்பனவு | 142,575 | 65,300 |
| மூலதன மானியம் : நிரந்தரக் கட்டமைப்புகள் | 443,000 | 225,250 |
| மூலதன மானியம் : ஏனையவை | 8,600 | 2,600 |
| ஏனைய மானியங்கள் : விஸ்தரிக்கப்பட்ட நிகழ்சிகள் | 16,725 | 5,637 |
| விஷேட ஒதுக்கு | 4,804 | 9,199 |
| மீண்டெழும் வகைக்கான மூலதன மானியம் | (2,774) | 1,119 |
| | 417 | 326 |
| விஷேட மானியங்கள் | | |
| **நிதியிடல் செயற்பாடுகளில் தேறிய காசுப் பாச்சல்** | **650,847** | **369,193** |
| **தேறிய காசு மற்றும் காசு சமப் பெறுமதிகளில் அதிகரிப்பு அல்லது (குறைப்பு)** | **36,170** | **30,542** |
| **ஆரம்ப காலப் பகுதியில் காசு மற்றும் காசு சமப்பெறுமதிகள் (குறிப்பு 01)** | **59,274** | **28,732** |
| **இறுதிக் காலப்பகுதியில் காசு மற்றும் காசு சமப் பெறுமதிகள் (குறிப்பு 01)** | **95,444** | **59,274** |

| ***காசு மற்றும் காசு சமப் பெறுமதிகளின் பகுப்பாய்வு*** | ***31.12.2014இல்*** | ***31.12.2013இல்*** |
|---|---|---|
| மக்கள் வங்கி குளியாப்பிட்டிய – க கு இல: 028100151586123 | 14,085 | 15,904 |
| மக்கள் வங்கி மஹாகந்துர – க கு இல:100120000171 | 12,636 | 9,460 |
| மக்கள் வங்கி மஹாகந்துர – க கு இல:100140000165 | 346 | 304 |
| இலங்கை வங்கி குளியாப்பிட்டிய – க கு இல:0002874770 | 11,943 | 10,985 |
| இலங்கை வங்கி குளியாப்பிட்டிய – க கு இல:00001473507 | 14,725 | 6,933 |
| இலங்கை வங்கி குளியாப்பிட்டிய – க கு இல:0001473508 | 3,647 | 738 |
| இலங்கை வங்கி குளியாப்பிட்டிய – க கு இல:0001473388 | 12,626 | 39 |
| மக்கள் வங்கி மஹாகந்துர – க கு இல:100120000963 | 6,155 | 4,240 |
| மக்கள் வங்கி மஹாகந்துர – க கு இல:100130041538 | 801 | 1,027 |
| மக்கள் வங்கி மஹாகந்துர – க கு இல:100140044857 | 18,349 | 9644 |
| மக்கள் வங்கி மஹாகந்துர - நடைமுறைக்கணக்கு 137100230000165 | 131 | |
| **மொத்தம்** | **95,444** | **59,274** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

எண்டப்ளியு/பிரீபி/டப்ளியூயு

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. /1/14/45 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2015 செப்தெம்பர் 14 |

உபவேந்தர்,

இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்.

**இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 108 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் உப பிரிவின் பிரகாரமான விரிவான அறிக்கையொன்று பல்கலைக்கழகத்தின் உபவேந்தருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமங்கள்

புத்தகப் பெறுமதி பூச்சியமாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வரும் ரூபா 54,793,397 பெறுமதியான 04 நிலையான சொத்து விடயங்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுக் நியம இலக்கம் 07 இன் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்து நியாயப் பெறுமதியை புத்தகங்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச மானியங்களைக் கணக்கு வைத்தல் மற்றம் அரச மானியங்கள் மூலம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சொத்துக்களை காலக்கழிவு செய்தல் தொடர்பான கணக்கீட்டுக் கொள்கை பல்கலைக்கழகத்தினால் இனங்காணப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் அரசின் மானியங்களின் அளவு ரூபா 2,568,722,000 தொகையாக இருந்ததுடன், அது

பிரதிநிதித்துவப்படுத்திய நடைமுறையல்லாச் சொத்துக்களின் தேறிய பெறுமதி ரூபா 1,156,324,406 ஆக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது பொதுத் திறைசேரியிலிருந்து வயம்ப பல்கலைக்கழகத்திற்காக கிடைத்த மொத்த மூலதன நிதி மானியங்கள் ரூபா 604,100,000 தொகையாக இருந்ததுடன், மீண்டுவரும் நிதி மானியங்கள் ரூபா 703,275,000 ஆக இருந்தது. எவ்வாறாயினும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மூலதன மானியங்கள் ரூபா 624,675,000 தொகையும் மீண்டுவரும் மானியங்கள் ரூபா 682,700,000 தொகையுமாக இருந்ததுடன், ரூபா 20,575,000 தொகையான செலவின மானியங்கள் மூலதன மானியங்களாக கணக்கீடு செய்யப்பட்டமை இவ்வேறுபாட்டிற்கு காரணமாக இருந்தது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் இனங்காணப்பட்டிருந்த ரூபா 45,644 கிரயத்திலான பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத பொருட்கள் மற்றும் ரூபா 1,708,108 கிரயத்திலான பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத பொருட்கள் என்பவற்றின் நியாயமான பெறுமதியைக் காண்பிப்பதற்காக தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு முறையாக பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்படாத மாகந்துர வளாகத்தின் இரண்டு மாணவர் விடுதிக் கட்டிடங்களுக்காக பல்கலைக்கழகத்தினால் செலவிடப்பட்டிருந்த ரூபா 5,341,038 தொகை கட்டிடங்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(உ) பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத பொருட்களாக இனங்காணப்பட்டிருந்த ரூபா 2,638,573 கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கைதவிர்க்கப்பட்டிருந்த போதிலும், அதன் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு அளவினை புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மூலதனச் சொத்துக்களை புனரமைப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான நிதிஏற்பாடுகளாக மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 37,500,000 ஆன மூலதன நன்கொடைகளில் ரூபா 2,774,000 தொகை மீண்டுவரும் செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்டிருந்ததுடன், அதனை மீண்டுவரும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) பல்கலைக்கழகத்தின் பெயரில் இரண்டு அரச வங்கிகளில் காணப்பட்ட ரூபா 306,500 தொகையான வைப்புக்கள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2012 ஆம் ஆண்டின் போது களஞ்சியத்தில் ஏற்பட்டிருந்த ரூபா 31,250 தொகையான இருப்பு பற்றாக்குறை மற்றும் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட எனினும் ஆரம்பிக்கப்படாத வியாபார நிர்வாகம் தொடர்பான சான்றுப்பத்திர பாடநெறிக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 144,448 தொகை உட்பட மொத்தம் ரூபா 175,698 தொகை முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் நிதிக்குழு தீர்மானத்தின் பிரகாரம் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஐ) இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை பாடநெறி மற்றும் வெளிவாரி பயிற்சி பாடநெறிக்காக பல்கலைக்கழகத்தினால் செலவிடப்பட்டிருந்த முறையே ரூபா 38,114 தொகை மற்றும் ரூபா 61,215 தொகையாக மொத்தம் ரூபா 99,329 உரிய பாடநெறிகளின் செலவினமாக கணக்கீடு செய்யாமல் பல்கலைக்கழகத்தின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்காய்விற்காக சான்றுகளின்மை

ரூபா 1,111,768,027 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்களுக்கான காணி உறுதி, கையளித்தல் கட்டளை, நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் பட்டோலைகள் போன்ற சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.3 பெறவேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 முதல் 19 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து நிலவி வரும் பதவியணியினர் கடன் ரூபா 8,990 தொகை, ரூபா 116,356 தொகையான இடர்கடன் மீதி, நூலகப் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் கொள்வனவிற்காக வழங்கப்பட்ட ரூபா 470,597 தொகையான முற்பணம் மற்றும் ரூபா 2,486,208 தொகையான நிர்மாாணங்களுக்கான முற்பணம் என்பவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஓராண்டு காலத்திற்கு மேலாக இருந்து வரும் ரூபா 482,503 தொகையான செலுத்த வேண்டிய தொகையை தீர்வு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஓராண்டு காலத்திற்கு மேலாக இருந்து வரும் 06 ஏனைய பொறுப்பு விடயங்களுக்குரிய ரூபா 719,550 கூட்டுத்தொகை மற்றும் செலுத்த

வேண்டிய கணக்கு மீதியிலான ரூபா 1,751,587 தொகை என்பன மீளாய்வாண்டின் இறுதியில் கணக்கு கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ச) 2006, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் சஞ்சிகைகளைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த முற்பணங்களில் ரூபா 307,045 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் XIX 4.1 பிரகாரம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2013 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய 12/2013 ஆம் இலக்க சுற்றறிக்கை | I. சுற்றறிக்கை ஏற்பாடுகளிலிருந்து விலகி உத்தியோகபூர்வ விடுதி வழங்குவதற்காக பதிவாளருக்கும் நூலகருக்கும் நிர்வாக சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் மாதாந்தம் ரூபா 10,000 வீதம் மீளாய்வாண்டில் ரூபா 220,000 ஆன படிகள் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறான படியொன்றை அரச உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கான அங்கீகாரமொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.<br><br>II மேலும் பல்கலைக்கழகத்தின் நிறைவேற்று உத்தியோகத்தர்களின் விடுதியில் குடியிருந்த காரணத்தினால் பதிவாளரிடமிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 7,950 தொகை அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பதிவாளர் ஏதேனும் பணத்தைக் கொடுத்து பல்கலைக்கழக வளவில் தங்கியிருந்தாரா என்ற |

| | | |
|---|---|---|
| | | சந்தேகத்தை கணக்காய்வின் போது தவிர்க்க முடியாதுள்ளது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| | (i) நிதிப்பிரமாணம் 271 (2) (அ) (ஆ) | 2001 ஆம் ஆண்டு முதல் 2013 திசெம்பர் 31 வரை செலுத்தப்படாத ரூபா 111,113 தொகையான சம்பளம் தொடர்பாக பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் நடைமுறைப் பொறுப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது. |
| | (ii) நிதிப்பிரமாணம் 396(ஈ) | ரூபா 200,649 பெறுமதியான வழங்கப்பட்ட எனினும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத திகதி முதல் 06 மாத காலத்தை விஞ்சிய 16 காசோலைகள் தொடர்பாக பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கை மூலம் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த நடைமுறையைப் பின்பற்றாமல் வயம்ப பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள் மற்றும் ஏனைய 157 உத்தியோகத்தர்களுக்கு ஆராய்ச்சி மானியமாக மீளாய்வாண்டின் போது ரூபா 24,238,719 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இப்படிகள் அரசின் ஏனைய சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கும் செலுத்தக்கூடிய வகையில் வேலைத்திட்டமொன்றை இச்சுற்றறிக்கை மூலம் உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த முன்மொழிவு முறைமையின் நிபந்தனைகளைக் கருத்திற் கொள்ளாமல் இலகுவான அடிப்படையொன்றில் பல்கலைக்கழக பதவியணியினருக்கு இக்கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளிலான நிதி விளைவுகள் ரூபா 101,915,000 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நிதி விளைவுகள் ரூபா 135,853,000 பற்றாக்குறையாக இருந்தது. அதன்படி, முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 33,938,000 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிச் செயலாற்றல்

நிதிச் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தால் உழைக்கப்பட்ட வருமானம் 71 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் அதில் உள்ளடக்கப்பட்ட முதலீட்டு வருமானத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடுசெய்த போது ரூபா 1,472,000 இனால் அதிகரித்திருந்ததுடன் அது 4,329 சதவீதமாக இருந்தது. எனினும் முதலீடுகளின் பெறுமதியை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது 73 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டின் போது கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் நடைமுறைக் கணக்குகளில் காணப்பட்ட மிகையான மீதிகளை குறுகிய கால முதலீடுகளில் ஈடுபடுத்தி வட்டி வருமானமொன்றை உழைக்கும் நடைமுறையொன்று ஆண்டின் போது பின்பற்றப்பட்டிருந்தமை இந் நிலமைக்கு காரணமாக அமைந்திருந்தது.

(ii) முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது பல்கலைக்கழகத்தின் மொத்தச் செலவினம் 18 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. சம்பளம் மற்றும் வேதனம், பிரயாணச் செலவுகள் மற்றும் இணைந்த படிகள், வழங்கல் மற்றும் நுகர்வுப் பொருட்கள், ஒப்பந்தச் சேவைகள்,

ஏனைய மீண்டெழும் செலவினம், மாணவர் உதவுதொகை மற்றும் பராமரிப்புச் செலவினம் போன்ற செலவின விடயங்களில் ரூபா 117,427,271 தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டதுடன் அவற்றின் சதவீதம் 5 முதல் 109 வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. இச் செலவின அதிகரிப்பில் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த பிரயாணச் செலவினம் கருத்திற் கொள்ளக் கூடியளவு அதிகரிப்பொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) நிதி நிலைமை

நிதிநிலைமை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் இறுதியில் நடைமுறையல்லாச் சொத்துக்களை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்தபோது 42 சதவீதத்தால் அதிகரித்திருந்தமைக்கு ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி 20 சதவீதத்தினால் அதிகரித்தமை மற்றும் நடைமுறை வேலைகளின் பெறுமதி 108 சதவீதத்தினால் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

(ii) நடைமுறையல்லாத பொறுப்புக்களை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது 29 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது ரூபா 39,000 தொகையான செலவிடப்படாத மூலதன நன்கொடைகள் மீளாய்வாண்டின் போது ரூபா 12,754,000 வரை அதிகரித்திருந்தது. இது சிறந்த நடைமுறையொன்றல்ல என அவதானிக்கப்பட்டது.

(iii) திரண்ட நிதியம் தொடர்ச்சியாக குறைந்து கொண்டு செல்லும் நிலையில் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் மேலும் ரூபா 101 மில்லியனால் குறைவடைந்திருந்தது. அதன் சதவீதத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது 11 சதவீதமாக இருந்தது.

## 3.3 பல்கலைக்கழகத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டவிடயங்கள்

பல்கலைக்கழகத்துடன் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 27,000,952 ஒப்பந்தப் பெறுமதியின் அடிப்படையில் குளியாப்பிட்டிய வளாகத்தில் தனிநபர் விடுதியொன்றை நிர்மாணிப்பதற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு, ஒப்பந்தத்தை இடைநடுவில் நிறுத்திய தனியார் ஒப்பந்தக்காரரால், அவரின் பிணை முறிகளின் பெறுமதியான ரூபா 6,000,000 இனை அறவிடுவதை இடைநிறுத்தும் படி பல்கலைக்கழகத்திற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இதன் காரணமாக

உடன்படிக்கையின் பிரகாரம் 2012 ஆகஸ்ட் மாதம் இறுதியில் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்தம் 2015 யூலை வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் ஒவ்வொரு பீடங்களுக்காக ஏற்பட்டிருந்த செலவினம், மாணவர் எண்ணிக்கை மற்றும் ஒரு மாணவருக்குரிய கிரயம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | பீடம் | விபரம் | | முன்னைய ஆண்டு 2013 | மீளாய்வாண்டு 2014 ரூபா | அதிகரிப்பு சதவீதமாக |
|---|---|---|---|---|---|---|
| (i) | வியாபாரக் கல்வி மற்றும் நிதியியல் பீடம் | செலவினம் | ரூபா | 73,543,884 | 91,453,057 | 24 |
| | | மாணவர் எண்ணிக்கை | ரூபா | 1,312 | 1,521 | 15 |
| | | ஒரு மாணவருக்கான கிரயம் | ரூபா | 56,055 | 60,126 | 07 |
| (ii) | பிரயோக விஞ்ஞான பீடம் | செலவினம் | ரூபா | 74,208,889 | 95,292,894 | 28 |
| | | மாணவர் எண்ணிக்கை | ரூபா | 428 | 461 | 07 |
| | | ஒரு மாணவருக்கான கிரயம் | ரூபா | 173,385 | 206,709 | 19 |
| (iii) | விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடம் | செலவினம் | ரூபா | 84,163,292 | 100,091,898 | 18 |
| | | மாணவர் எண்ணிக்கை | ரூபா | 439 | 454 | 03 |
| | | ஒரு மாணவருக்கான கிரயம் | ரூபா | 191,716 | 220,446 | 15 |
| (iv) | கால்நடை, கடற்றொழில் மற்றும் போசணை விஞ்ஞான பீடம் | செலவினம் | ரூபா | 82,539,376 | 106,824,982 | 29 |
| | | மாணவர் எண்ணிக்கை | ரூபா | 393 | 420 | 06 |
| | | ஒரு மாணவருக்கான கிரயம் | ரூபா | 210,024 | 254,345 | 21 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினுள் கால்நடை, கடற்றொழில் மற்றும் போசணைப் பீடத்திலும் விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடத்திலும் ஒரு மாணவருக்கான கிரயம் ஏனைய பீடங்களுக்கு ஒப்பாக கூடிய பெறுமதியைக் கொண்டிருந்ததுடன், அது வியாபார கல்வி மற்றும் நிதியியல் பீடத்தின் ஒரு மாணவருக்கான கிரயத்திற்கு ஒப்பாக முறையே 423 சதவீதம் மற்றும் 366 சதவீதத்தினை கொண்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ஒரு மாணவருக்கான கிரயம் வியாபாரக் கல்வி மற்றும் நிதியியல் பீடத்தில் 7 சதவீதத்தாலும், பிரயோக விஞ்ஞான பீடத்தில் 19 சதவீதத்தாலும், விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடத்தில் 15 சதவீதத்தாலும் கால்நடை, கடற்றொழில் மற்றும் போசணை விஞ்ஞான பீடத்தில் 21 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டன.

(இ) பல்கலைக்கழகத்தின் நான்கு பீடங்களுக்காக தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களில் கருத்திற்கொள்ளக் கூடியளவில் எண்ணிக்கையொன்று வெவ்வேறு காரணங்கள் அடிப்படையில் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு மாற்றலாகியிருந்தனர். கல்வியாண்டில் பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களில் 155 பேர் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு மாற்றலாகிச் சென்றிருந்ததுடன், அது பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் 15 சதவீமாக காணப்பட்டது. அதன் பிரகாரம் மாற்றலாகிச் சென்ற 155 மாணவர்களுக்காக பல்கலைக்கழகத்தினுள் ஒதுக்கப்பட்டு காணப்பட்ட வளங்கள் விளைவற்றிருந்தா எனும் சந்தேகத்தினை புறக்கணிக்க முடியாதுள்ளது.

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுவதற்கு தகைமை பெற்று அச்சந்தர்ப்பம் கிடைக்காமல் போன மாணவர்கள் தொடர்பில் கவனம் செலுத்தி இவ்வளங்கள் வீணாவிதை தவிர்ப்பதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்று முன்மொழிவு செய்தல் மீளாய்வாண்டின் போதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வியாபாரக் கல்வி மற்றும் நிதியியல் பீடத்தின் மாணவர் எண்ணிக்கை மற்றும் கல்விசார் பதவியணி எண்ணிக்கைக்கு இடையே காணப்பட வேண்டிய ஏற்றுக்கொள்ளப்பட்ட விகிதம் 18:1 ஆக இருந்த போதிலும், அதன் உள்ளவாறான விகிதம் 44:1 ஆக இருந்தது. அது

மிகவும் பாதகமான காரணியொன்றாக அவதானிக்கப்பட்டது. ஏனைய மூன்று பீடங்களினது ஏற்றுக்கொள்ளப்பட்ட விகிதம் 10:1 ஆக இருந்த போதிலும், உள்ளவாறான விகிதம் 12:1 ஆக இருந்த காரணத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விகித்ததை விட உள்ளவாறான விகிதம் சிறு அளவினால் மாத்திரம் அதிகரித்திருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற மூன்று விரிவுரையாளர்கள் வெளிநாடு சென்றபோது பல்கலைக்கழகத்துடன் இணங்கப்பட்ட உடன்படிக்கை 2001, 2003 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறித்தமையின் காரணமாக அவர்களிடமிருந்து மேலும் பல்கலைக்கழகத்திற்கு அறவிட வேண்டியிருந்த ரூபா 3,826,651 தொகையினை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறான இலகு கொள்கையொன்றை பின்பற்றுவதனால் எதிர்காலத்தில் அரசின் வளங்களை பயன்படுத்தி வெளிநாடு செல்லும் விரிவுரையாளர்களும் இதனை முன்மாதிரியாக கொள்வதற்கு இடவசதிகள் காணக்கூடிய சந்தேகத்தை கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதுள்ளது.

(ஆ) மாகந்துரை வளாகத்தில் அமைந்துள்ள நூலகத்திற்காக 2008 ஆம் ஆண்டின் போது கண்காட்சியொன்றிலிருந்து ரூபா 4,130,710 தொகையான நூலகப் புத்தகங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. அங்கு கொள்வனவு நடைமுறையின் அநேகமான விடயங்கள் கருத்திற்கொள்ளாமல் இருந்தமை, நூலகப்புத்தகங்களின் தேவைப்பாடு, விலை விபரம் தொடர்பாகவும் பதிப்பு ஆண்டு தொடர்பிலும் கருத்திற்கொள்ளப்படாதிருந்தமை எமது முன்னைய கணக்காய்வு விசாரணை மற்றும் கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தன. பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையால் இக்கொள்வனவு தொடர்பாக பரிசோதிக்கப்பட்டு அறிக்கையிடுவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் மூலம் முறையான நடவடிக்கையொன்று எடுக்காமல் ரூபா 4,053,786 பெறுமதியொன்று மீளாய்வாண்டில் உரிய நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. இது புத்தகங்கள் கொள்வனவிற்காக செலவிடப்பட்டிருந்த கியத்தில் கருத்திற் கொள்ளக் கூடியளவிலான பெறுமதி விளைவற்ற செலவினமொன்றாக இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், அக்கொள்வனவு தொடர்பாக இடம்பெற்றுள்ள புறக்கணிப்புக்களுக்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினர்

தொடர்பான முறையாக ஆராய்ந்து பார்த்து தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவரின் UGC/HR/09/01/75 ஆம் இலக்கமுடைய 2008 செப்தெம்பர் 08 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் தொழிலாளர் தரங்களில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்பும் வரை ஆரோக்கிய நலன் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக வெளியக உழைப்பு வழங்கும் நிறுவனமொன்றிடமிருந்து சேவை பெற்றுக்கொள்ளப்பட்டு அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 3,664,770 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. குறித்த கம்பனியுடனான உடன்படிக்கை 2013 செப்தெம்பர் 16 ஆந் திகதியுடன் முடிவடைந்திருந்த போதிலும், மீண்டும் போட்டிக் கொள்வனவு நடைமுறையொன்றுக்குச் செல்லாமல் குறித்த நிறுவனத்தின் சேவைக்காலம் அவ்வப்போது நீடிக்கப்பட்டிருந்தது.

(ஈ) விடுதி வசதிகள் தேவையான மாணவர்கள் தொடர்பாக முறையான ஆய்வொன்றில்லாமல் 89 மாணவர்களுக்கு விடுதி வசதிகளை வழங்குவதற்காக ரூபா 2,700,000 செலுத்தி கட்டிடமொன்றை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் ஒரு மாணவருக்காக வருடாந்தம் செலவிடப்பட்டிருந்த கிரயம் ரூபா 30,337 ஆக இருந்தது. இக்கட்டிடத்தினுள் 150 மாணவர்களுக்கு விடுதிவசதிகளை வழங்கக்கூடிய கட்டிடமொன்றாக அவதானிக்கப்பட்டது.

(உ) மீளாய்வாண்டின் போது மாகந்துர கால்நடை அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் கால்நடை தொட்டிகள் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், அந்நிலைமை கணக்கு பிரிவிற்கு அறிக்கையிடாத காரணத்தினால் ரூபா 2,469,713 தொகையான கிரயம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தின் பதவியணியினரின் அபிவிருத்திக்காக 2012 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து கிடைத்த ரூபா 10,500,000 தொகையில் 13 சதவீதம் அதாவது ரூபா 1,348,618 தொகை குறித்த செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்தின் பராமரிப்பு பிரிவின் மூலம் சில நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், கால்நடை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட கட்டிடப் பொருட்கள் ரூபா 1,647,590 தொகை மாகந்துர பராமரிப்பு பிரிவின் இருப்பு பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் ஒருவருக்கு கலாநிதி பட்டப்பின் படிப்பின் பின்னர் மேற்கொள்ளும் ஆய்வு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்த பவுன் 5,000 (ரூபா 980,200) தொகையை அவரின் தனிப்பட்ட கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக காணப்பட்ட எதிர்ப்பினை கருத்திற் கொள்ளாமல் பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையின் 2014 சனவரி 21 ஆந் திகதிய C/141/48SUPP ஆம் இலக்க கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த அங்கீகாரத்தினால் பணத்தை செலவு வைத்தமை சர்ச்சைக்குரிய விடயமொன்றாக இருந்தது. இவ்விரிவுரையாளருக்கு உரிய ஆய்வு நடவடிக்கைகளுக்காக இலங்கை வயம்ப பல்கலைகத்தின் விரிவுரையாளர் என்ற வகையில் பணம் கிடைக்கப்பெற்றுள்ளதை கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதுள்ளது.

(ஆ) மாகந்துர வளாகத்தில் இரண்டு மாணவர் விடுதிகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் மதிப்பீட்டை தயாரித்தல், உடன்படிக்கை கைச்சாத்திடல் மற்றும் பணக் கொடுப்பனவு என்பன உயர்கல்வி அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிர்மாணம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் நிலத்தை தயார்படுத்தல் நடவடிக்கை மேற்கொள்வதற்கு பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 1,640,510 தொகை பல்கலைக்கழகத்தினால் செலவிடப்பட்டிருந்தது, எவ்வாறாயினும் கட்டிட நிர்மாண ஒப்பந்தக்காரர் மற்றும் பல்கலைக்கழகத்திற்கிடையே எதுவித உடன்படிக்கையொன்று இல்லாமல் இச்செயற்திட்டத்திற்காக பல்கலைக்கழக கட்டிட நிர்மாணத்திற்காக பல்கலைக்கழக நிதியத்திலிருந்து ரூபா 5,341,038 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தால் விடுதியை வாடகைக்கு எடுக்கும் போது மதிப்பிட்டுப் பெறுமதியை மிகைத்து ரூபா 246,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக நிர்வாக சபையின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மாகந்துர வளாகத்தின் இரண்டு விரிவுரையாளர்கள் மீளாய்வாண்டில் ஒரே தினத்தில் கொழும்பிற்குச் செல்வதற்காக ரூபா 5,850 மற்றும் ரூபா 5,148 தொகை எனும்படியாக ரூபா 10,998 செலுத்தி இரண்டு வாடகை வாகனங்களைப் பெற்றுக் கொண்டிருந்தமை சிக்கனமற்ற நடவடிக்கையொன்றாக அவதானிக்கப்பட்டது.

(இ) 2010 திசெம்பர் 07 ஆந் திகதிய 150 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சின் பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்ததன் பின்னர் வாடகை வாகனங்கள் அகற்றப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்தால் 2013 ஆம் ஆண்டில் 05 புதிய வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் மீளாய்வாண்டில் வாடகை வாகனங்களுக்காக ரூபா 2,724,456 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், அது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 50 சதவீத அதிகரிப்பொன்றாகும்.

4.7 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உடன்படிக்கை காலத்தினுள் வேலையைப் பூர்த்தி செய்யாமை காரணமாக கொடுப்பனவு செய்யும் போது மேலதிக செலவினப் பொறுப்பொன்று மேற்கொள்வதற்கு நேர்ந்திருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

(i) குளியாப்பிட்டிய வளாகத்தில் வியாபாரக் கல்வி மற்றும் நிதியியல் பீட கட்டிடத்தின் நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்கான உடன்படிக்கை காலம் 2011 சனவரி 27 ஆந் திகதியில் முடிவடைந்த போதிலும், நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு கட்டிடம் 2013 நவம்பர் 28 ஆந் திகதியே கையளிக்கப்பட்டிருந்தது. அத்திகதியின் பின்னர் 2015 சனவரி மாதம் வரையில் எந்தவொரு பட்டியலும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. நிர்மாண தாமதம் விலை முரண்களை கணக்கிடுவதற்கு உட்படுவதுடன், விலை முரண்களுக்காக இதுவரை மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு ரூபா

10,363,120 ஆக இருந்தது. இதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள காரணங்களை கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள சிக்கலாக உள்ளது.

(ii) மாகந்துர வளவில் தனிநபர் விடுதி கட்டிடத்தின் நிர்மாணம் 2012 ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதும், அது 2013 ஆம் ஆண்டிலேயே பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அக்கட்டிடத்திற்காக மீளாய்வாண்டின் போது எதுவித பட்டியலொன்று சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், 2015 ஆம் ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த 07 ஆவது பட்டியலுக்காக ரூபா 2,424,959 தொகை விலை விலகலுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரரின் பலவீனமான நிர்மாணத்தின் அடிப்படையிலேயே நிர்மாணத்தில் காலதாமதம் ஏற்பட்டதாக 2012 செப்தெம்பர் 18 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கையில் விலை முரண் கொடுப்பனவை அங்கீகரித்தமை சர்ச்சைக்குரிய விடயமொன்றாக இருந்தது.

(ஆ) ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக நடைமுறை வேலையாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 34,085,902 கூட்டுப் பெறுமதி தொடர்ந்தும் மாற்றமுறாது காணப்பட்டது. அதில் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான மீதிகளும் காணப்பட்டன.

## 4.8 பதவியணியினர் நிருவாகம்

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பதவியணியினர் 275 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான கல்விசார் பதவியணியினரின் எண்ணிக்கை 255 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் போது சில கற்கைப் பிரிவுகளில் சில விடயங்களுக்காக விஷேட திறன்களையுடைய விரிவுரையாளர்கள் இன்மையின் காரணமாக 69 வெளிவாரி விரிவுரையாளர்கள் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு சம்பளமாக ரூபா 8,508,195 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கையின் படி 26 சிற்றூழியர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அது நாளாந்த நடவடிக்கைகளைச்

செய்வதற்காக அவ்வளவாக இடையூறாக இல்லாதிருந்த போதிலும், பல்வேறு காரணங்கள் காண்பிக்கப்பட்டு வெளிவாரி ஊழியர் சேவைகளை வழங்கும் நிறுவனத்திலிருந்து 12 தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டு அவர்களின் சம்பளமாக மீளாய்வாண்டின் போது ரூபா 3,644,770 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம், நிறுவனமொன்றின் திட்டமிடப்பட்ட வியாபார காலப்பகுதியில் (ஓராண்டிற்கு) நோக்கம் மற்றும் இலக்கினை பூர்த்தி செய்வதற்காக தெளிவாக அடையாளம் காணப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கி செயல்நடவடிக்கைத் திட்டமொன்றை தயாரித்தல் முகாமையின் பொறுப்பாக இருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக முறையான தயாரிக்கப்பட்ட செயல்நடடிக்கைத் திட்டமொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்டிருந்த முறைப்படி அமையாத செயல்நடவடிக்கைத் திட்டத்தில் கட்டிட புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் என்பவற்றின் கீழ் ரூபா 12,500,000 நிதிஏற்பாடு காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் முடிவுக் கணக்கில் மேற்படி நிதிஏற்பாடு ரூபா 37,500,000 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 10 வேலை விடயங்களுக்காக ரூபா 12,500,000 தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டினுள் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்காத வகையில் 51 வேலை விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு அதற்காக ரூபா 39,577,470 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) கட்டிட நிர்மாணத்திற்காக ரூபா 455,000,000 பெறுமதியான செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் செயன்முன்னேற்றம் திருப்திகரமான மட்டத்தில் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. வியாபாரக் கல்வி பீடக் கட்டிடம் மற்றும் கல்விசார் விவாகமாகாத பதவியணி கட்டிடம் போன்ற செயற்திட்டங்களுக்காக முன்னைய ஆண்டில் சேமிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டுடன் மீளாய்வாண்டின்

இறுதியில் ரூபா 5,398,871 தொகையும் சேமிக்கப்பட்டிருந்தது. மாகந்துர சுகாதார நிலையத்திலிருந்து 49 சதவீதமும், குளியாப்பிட்டிய சேவை நிலையத்திலிருந்து 96 சதவீதமும், விளையாட்டு மைதானத்தை அமைப்பதன் மூலம் 20 சதவீதமும் விளையாட்டுத் துறையின் நிபுணத்துவத்திற்காக 93 சதவீதமுமாக மொத்தம் ரூபா 14,515,623 சேமிக்கப்பட்டிருந்தன. 08 செலவின விடயங்களுக்காக மொத்த ஏற்பாட்டை விஞ்சி ரூபா 23,120,397 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டை தயாரிக்கும் போது 40 செலவின விடயங்களுக்கு மிகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தமை, 20 செலவின விடயங்களில் பாதீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டை விஞ்சி செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை, 02 செலவின விடயங்களில் மொத்த நிதி ஏற்பாட்டுத் தொகையும் செலவிடப்பட்டிருக்காமை மற்றும் 03 செலவின விடயங்களில் ஏற்பாடு இல்லாமல் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் பல்கலைக்கழகத்தால் வருடாந்த பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5.3 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களுக்கு 2010 - 2011 ஆம் ஆண்டு வரையிலான கால எல்லையில் ஒரு செயற்திட்ட முன்மொழிவொன்றை சமர்ப்பித்த விரிவுரையாளருக்கு அச்செயற்திட்டத்திற்காக ரூபா 99,882 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அச்செயற்திட்டத்திற்குரிய ஆராய்ச்சி அறிக்கை 2013 பெப்ரவரி இறுதியில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2015 யூன் 30 ஆந் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(1) ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம், உரிய ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் அவ்வப்போது உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் கோரப்படுகின்றது.

(அ) பாதீடு
(ஆ) நூலகப் புத்தகங்களும் சஞ்சிகைகளும் கொள்வனவு
(இ) நிர்மாண ஒப்பந்தம்
(ஈ) முற்பணம் வழங்குதல்
(உ) வெளிவாரிப் பாடநெறிகளை நடாத்துதல்
(ஊ) இருப்புக் கட்டுப்பாடு
(எ) பதவியணியினர் நிர்வாகம்
(ஏ) கொள்வனவு நடைமுறைகள்
(ஐ) வாகனக் கட்டுப்பாடு
(ஒ) வெளிவாரி விரிவுரை தொடர்பான கட்டுப்பாடு

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

## இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் 2014 டிசம்பர் 31ம் திகதியில் முடிவுறும் வருடத்திற்கான நிதிக் கூற்றுப் பற்றிய 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்கத்தைக் கொண்ட பல்கலைக்கழக சட்டத்தின் 108(1) பிரிவின் படி கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

### 2.2 நிதிக் கூற்றுக்கு உரிய அபிப்பிராயங்கள் தெரிவித்தல்

#### 2.2.1 இலங்கை அரச பிரிவு கணக்கியல் நியமனம்

இந்த நாள் வரையில் 2013.12.31 தினத்திற்கான பல்கலைக்கழகத்திற்கு உரிய நிலம், கட்டிடங்கள் மற்றும் வாகன மதிப்பீட்டு மூலமும், வேறு சகல நிலையான சொத்து பல்கலைக்கழகத்தின் மூலம் நியமிக்கப்பட்ட குழு மூலமும் செய்து கொண்டு இருக்கின்ற அதே வேளை அது முடிவுற்றவுடன் உடனடியாக நிரந்தர சொத்து பதிவை உருவாக்கி கொள்ள முடியுமென தயவுடன் இத்தாள் தெரியப்படுத்துகிறேன்.

#### 2.2.2 கணக்கீட்டு குறைபாடு

**(அ)** அரச பிரதான கணக்கு வைப்பு மற்றும் கணக்கீட்டு நியமனத்தின் படி 2016ஆம் ஆண்டின் கணக்கு கூற்று தயாரித்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது.

**(ஆ)** 2014/12/22 திகதி பிரதான திறைசேரி மூலம் ரூபா 20,575,000 க்கான நிதியை இலங்கை வங்கியில் கொண்டு செல்வதற்கென நடைமுறைக் கணக்கிற்கு நேரடியாக முதலிடப்பட்டு இருந்தது அந்த நடைமுறைக் கணக்கு மூலதன மானியத்திற்காக கொண்டு நடாத்தப்படுகின்ற நடைமுறைக் கணக்கு என்றும் அது மூலதன மானியம் எனக் கருத்தில் கொண்டு 2014ஆம் ஆண்டினுடைய மூலதன செலவை செலுத்திக் கொள்வதற்காக பயன்படுத்திக் கொள்ளப்பட்டு உள்ளது.

ஆனால் 2015/02/06 அன்று கிடைக்கப் பெற்ற நிதி விடுப்பு செய்வதற்கு ஆவணத்தில் அது மீண்டும் நிதி விடுப்பு செய்வதாக குறிப்பிட்டு இருந்தாலும் அது வரைக்கும் அதற்குரிய நிதி மூலதனம் செலுத்துவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டதாக அது மூலதன மானியம் என கருத்தில் கொண்டு செயற்படும் படி 2015/02/16 திகதி இடப்பட்ட கடிதம் மூலம் பிரதான திறை சேரிக்கு தெரிவிக்கப்பட்டு உள்ளது.

**(இ)** நியமிக்கப்பட்ட குழுவின் மூலம் மஹாகந்துர சூழலில் உள்ள இங்கு குறிப்பிடப்பட்ட பாவிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்படாத சாதனங்கள் பரீட்சிக்கப்பட்டு உள்ளது. குளியாப்பிட்டிய சூழலில் இது வரை காலமும் உள்ள சாதனங்கள் பரீட்சிக்கப்பட வில்லை என்பதால் அவை பாவனைக்கு எடுப்பது என்ற தீர்மானம் பூரணமாக முடிவுறுத்தப் படவில்லை. எதிர் காலத்தில் அது பற்றிய நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

**(ஈ)** விடுதி இலக்கம் 03 மற்றும் 05 ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டு உள்ளது என சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ மூலதனப்பிரிவின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழின் படி 2014 ஆம் ஆண்டின் மூலதனமாக பாவிக்கப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டு முடிவுறுத்தப்பட்ட ஒப்பந்தம் பற்றி சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ மூலதனப் பிரிவின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட பதிவின் படி இந்த ஒப்பந்த வேலைப்பாடு முடிவுறுத்தப் படவில்லை என்றும் 2015 ஆம் ஆண்டு C117 சஞ்சிகை மூலம் மீண்டும் முடிவுறுத்தப்படாத வேலைப்பாட்டு கணக்கிற்கு மாற்றப்படுவதற்கு நடிவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

**(உ)** பாவனைக்கு எடுக்க முடியாத சாதனங்கள் அதிகரித்து உள்ளது என்றும் மற்றும் உபகரணங்கள் பற்றிய போதுமான தகவல் கிடைக்கப் பெறவில்லை என்பதால் கணக்கில் சரிப்படுத்தப் படவில்லை

**(ஊ)** மீண்டெழும் மூலதனம் கிடைக்கப் பெறுவது 2014 ஆம் ஆண்டில் அதிகமாக உள்ள / குறைவாக உள்ள சாதனங்களை மதிப்பிடுவதற்காக கணக்கிடும் நடவடிக்கையின் போது பிழையற்ற முறையில்

கணக்கிடப்பட்டு உள்ளது என்றும் மீண்டெழும் செலவீட்டிற்காக பெறுவனவாக கிடைக்கப்பட்ட ரூபா.2,774,000.00 மூலதன பெறுவனவு மூலம் நீக்கி விடுவது பிழையை திருத்தவதாக அமையும்.

**(எ)** 2014/12/31 அன்று கண்டு பிடிக்க முடியாத வைப்பு பற்றிய விபரங்கள் தேடப்பட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

**(ஏ)** நிதிக் குழு மற்றும் பேரவை தீர்மானத்தின் படி CBA பாடநெறிக் உரிய ரூபா.144,448.00 சுய நிதி மூலம் கொண்டு செல்வதற்கு பட்டப் பின்படிப்பு டிப்ளோமாவில் செலவீடாக கணக்கிடப்பட்டு உள்ளது இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 8 வரைக்கும் உள்ளவாறு இருப்பு தொகை குறைவாக உள்ள ரூபா 31,250.00 போதியளவாக இல்லாத பெறுமதி என்றும் கடந்த வருடங்களில் ஒப்பிட்டு கொள்வதற்கு காட்டப்படாத நிதிக் குழு மற்றும் பேரவை தீர்மானத்தின் படி ஆண்டு செலவாக கணக்கிடப்பட்டு உள்ளது.

**(ஐ)** இலங்கை விவசாய கொள்கை நிறுவனம் (CARP ) மற்றும் வெளிவாரி பயிற்சி பாட நெறி (SDC) க்காக மேலதிகமாக செலவாகி உள்ள நிதி கிடைக்கப் பெறவேண்டிய நிதியாக கணக்கிடப்பட்டு உள்ளதுடன் 2015ஆம் ஆண்டு குறித்த செலவை மீட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

**2.2.3 கணக்காய்விற்காக சாட்சி இல்லாமல் இருத்தல்**

**நில உறுதி / மாற்றிக் கொடுக்கும் ஆணை**

வரைபட இலக்கம் 992 இல் துண்டு இலக்கங்கள் 452,476,454 உத்தியோக பூர்வமாக பல்கலைக்கழகத்திற்கு மாற்றீடு செய்து மாற்றீட்டு சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்டு உள்ளது. அதை விட விற்பனைக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட கீழ்

குறிப்பிடப்பட்டுள்ள நிலப் பகுதிகளுக்கான உறுதி பல்கலைக்கழகத்தில் உள்ளது.

1) கந்தனேகெதர, வெரலுகம (உபவேந்தர் வாசஸ்தலம் அமைந்துள்ள நிலம் (உ. இ. 318 , வ. இ. 4937)
2) மஹாகந்துர சூழல் கமகேவெல மற்றும் நயிவல வயல் (உ. இ. 125, வ. இ. 4674)

பல்கலைக்கழகம் அனுபவிக்கும் வேறு நிலபுலங்கள் பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கி கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

**நிலையான சொத்து பதிவு**

இந்த நாள் வரையில் 2013.12.31 தினத்திற்கான பல்கலைக்கழகத்திற்கு உரிய நிலம் கட்டிடங்கள் மற்றும் வாகன மதிப்பீட்டு மூலமும், வேறு சகல சொத்து பல்கலைக்கழகத்தின் மூலம் நியமிக்கப்பட்ட குழு மூலமும் மீள் மதிப்பீடு செய்து கொண்டு இருக்கின்ற அதே வேளை அது முடிவுற்றவுடன் உடனடியாக நிரந்தர சொத்து பதிவை உருவாக்கி கொள்ள முடியும் என தயவுடன் இத்தாள் தெரியப்படுத்துகிறேன்.

**உப பதிவு**

2014/01/01 அன்றில் இருந்து கையகப்படுத்தப்பட்ட சொத்துகளிற்கு உரிய விபரம் அசையா சொத்து மென் பொருளுக்கு (Fixed asset software package) நிதிப் பிரிவு மூலம் உள்ளடக்கப்பட்டு உள்ளது. 2013/12/31 அன்று பல்கலைக்கழகத்திற்கு உரிய அசையா சொத்து பெறுமதி இன்று வரைக்கும் மதிப்பீடு செய்யப்பட்டு வந்து கொண்டிருக்கின்றது.

**2.3 கிடைக்கப்பட வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்கு.**

**(அ) (i) சேவை அணியினருக்கான கடன் ரூபா.8,990.00**

திரு.T.M.C.P பர்னாந்து உடைய ரூபா.4,080.00 அவருடைய பல்கலைக்கழக ஊழியர் சேமலாப நிதியிலிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதுடன் மேலும் மிகுதிப்பணம் 2015 இல் செலுத்தி தீர்க்கப்பட்டுள்ளது.

**(ii) இடர் ஈட்டுக் கடன் - ரூபா 116,356.00**

1. திரு.T.M.C.P பர்னாந்து உடைய கடன் நிலுவை ஆகிய ரூபா 114,240.00 பணம் அவருடைய பல்கலைக்கழக ஊழியர் சேமலாப நிதியை அவருக்கு மீண்டும் செலத்தும் போது அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
2. திரு.J.G.W.S நிசாந்த உடைய ரூபா.1,116.00 நிலுவை 2015ஆம் ஆண்டில் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.
3. திரு.S.V செனவிரத்ன உடைய ரூபா.1,000.00 கடன் நிலுவை அறவிட்டு கொள்வதற்கு பேராதனை பல்கலைக்கழகத்திற்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது.

**(iii) நூலக நூல்கள் சஞ்சிகைகள் விலைக்கு வாங்குவதற்கான முற்பணம் - ரூபா 470,597**

இங்கு பெறுமதி ரூபா 385,937.22 என பிழை திருத்தப்பட வேண்டும். இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் வயம்ப வளாகமாக செயற்பட்ட காலத்தி (1996 - 1999) பெற்றுக் கொடுக்கப்பட்ட இந்த முற்பணம் பற்றிய கடிதம் மிகவும் பழயதாகவும் அது தேடிப் பிடித்துக் கொள்ள மிகவும் அசௌகரியமானதாகவும் உள்ளது. இது பற்றிய தீர்மானம் எடுப்பதற்காக கணக்காய்வு குழுவிற்கு கடிதம் அனுப்பிவைத்து உள்ளதுடன்

2015/12/04 அன்று நடை பெற்ற 52 ஆது கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் இந்த நிதி நிதிக்கட்டுப்பாட்டு விதிகளின் படி வெட்டி நீக்கி விடுவதற்கு சிபார்சு செய்யப்பட்டு உள்ளது.

| பெற்றுக் கொடுத்த திகதி | வவுச்சர் இலக்கம் | நிறுவனம் | பெறுமதி ரூ. |
|---|---|---|---|
| 1996/12/31 | 50 | People’s Bank, International Branch | 36,860.17 |
| 1997/12/31 | C102 | Vote Trade Press | 70,235.04 |
| 1999/12/31 | C104 | Indian Institute of Packaging | 278,842.01 |
| | | Total | 385,937.22 |

**(iv) <u>நிர்மான முற்பணம் - ரூபா 2,486,208.00 (ஒப்பந்தப் பக்கம் 8/49)</u>**

இந்த சேவைக்கு சமன்பாடு செய்வதற்கான முற்பணமாக செலுத்தி உள்ளதுடன் 2014.12.31 வரைக்கும் ஒப்பந்தத்தின் நிர்மான நடவடிக்கைகள் முடிவுறுத்தப் படவில்லை என்றும் இது மீள் செலுத்தப்படாத முற் பணமாக குறிப்பிடப்பட்டு உள்ளது.

**(ஆ) (இ)** இந்த நிதி 2015ஆம் ஆண்டில் கணக்கு அறிக்கைகளின் தேவைக்கேற்ப சமன்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(ஈ)** இந்த முற்பணம் அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

**2.4 <u>சட்ட திட்டங்களுக்கு மற்றும் விதி முறைத் தீர்மானங்களுக்கு ஏற்ப அமையாமை</u>**

**(அ)(i) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவை இலக்கம் xix ஆவது அத்தியாயம் 4.1 படி மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2013 ஆகஸ்ட் 29 ஆம் திகதி இலக்கம் 12/2013 உடைய சுற்றறிக்கை**

